விலை: 60.00
பக்கங்கள் - 24
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
சங்குநாதம்

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 241 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 01 ஞாயிற்றுக்கிழமை (17.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

பொதிகள் சேவை
Parcel.lk GTV Express
நாங்கள் உங்கள் வீட்டுக்கு டெலிவரி செய்கிறோம
இங்கிலாந்து - Rs.1400/= அவுஸ்திரேலியா - Rs.1700/=
ஜெர்மனி - Rs.1900/= சுவிஸ் - Rs.2550/=
பிரான்ஸ் - Rs.2000/= இத்தாலி - Rs.2250/=
இல. 81A, பருத்தித்துறை வீதி, நெல்லியடி
இல.225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
GTV Enterprises (Pvt) Ltd (1335) 011 4 654 444

# குற்றங்களைக் கட்டுப்படுத்த புதிய சட்டம் அவசியம்

## பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய



(கொழும்பு)

குற்றச் செயல்களை முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்குப் புதிய சட்ட ஏற்பாடுகள் மிகவும் அவசியம் என பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## இருவருக்கு வாள்வெட்டு; ஐவர் பொலிஸாரால் கைது

### யாழில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரசடி பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று இரவு இரு குழுக்களுக்கிடையே இடம் பெற்ற மோதல் காரணமாக இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

படுகாயமடைந்தவர்கள் 23ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.ஆறுகால்மடத்தில் மின்சாரம் தாக்கியதில் சிறுவன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆறுகால்மடத்தில் மின்சாரம் தாக்கியதில் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுச் சனிக்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க

## 25 பவுண் தங்க நகையை திருப்பிக் கொடுக்காத நண்பி

### பண்டத்தரிப்பில் விபரீத முடிவெடுத்த இளம் குடும்பப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

நண்பி வாங்கிய 25 பவுண் தங்க நகைகளைத் திருப்பிக் கொடுக்காது ஏமாற்றியதால் மனமுடைந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் விபரீத முடிவெடுத்து நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் சில்லாலை, பண்டத் 23ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தவின் அறிவுரையைப் புறக்கணித்ததால் கோட்டாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது

### முன்னாள் அமைச்சர் டயானா கமகே



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அவரின் ஆட்சிக் காலத்தில் அவரின் சகோதரர் மகிந்த ராஜபக்ஷவின் அறிவுரைகளை கூட கேட்காததாலேயே ஆட்சி கவிழ்க்கப்பட்டதாக முன்னாள் அமைச்சர் டயானா கமகே தெரிவித்துள்ளார்.

அண்மையில் தொலைக்காட்சி சேவை ஒன்றுக்கு கருத்துத் தெரி 23ஆம் பக்கம் பார்க்க

### வதந்திகளைப் பரப்பி

## ஆட்சியைப் பிடிக்க எதிர்க்கட்சிகள் கனவு



பிரதமர் ஹரிணி அமரசூரிய

04ஆம் பக்கம் பார்க்க

- ஆலடி மாநாடு
- ஆச்சி அறிவுரை
- கவிதைக் கலசம்
- நல்வாழ்வுக்கான 4 படிகள்

இன்னும் பல அம்சங்களுடன்
சங்குநாதம் உள்ளே

## அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு கேள்விக்குறியே

### அமைச்சர் லால்காந்த



(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள உயர்வு குறித்து உத்தரவாதம் வழங்க முடியாது என நீர்ப்பாசன அமைச்சர் லால்காந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் 23ஆம் பக்கம் பார்க்க




நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள நகைக் கடை பாவனைக்குரிய கண்ணாடி அலுமாரி (Showcase) விற்பனைக்குண்டு (5070)

077 717 2726

## உடன் விற்பனைக்கு

யாழ்.KKS வீதியில் சிவன் கோயிலுக்கு அண்மையில், KKS வீதி முகப்புடன் 150 அடி நீளமும் 150 அடி அகலமும் கொண்ட காணித்துண்டு விற்பனைக்குண்டு. இதனை 15X150 ஆக பிரித்தும் விற்கப்படும். (C-3663)

தொடர்பு: 077 723 2535

## வேலையாட்கள் தேவை

ஏழாலையில் இயங்கி வரும் சைவ, அசைவ உணவகம் ஒன்றிற்கு அனைத்து விதமான உணவு தயாரிப்பவர் (கொத்து, றைஸ்,ரொட்டி) உடனடியாகத் தேவைப் படுகிறார். அனுபவம் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும் (5068)

076 924 0612, 075 037 4169
074 155 2504

## TUTOR NEEDED

Singala Lessons Needed. Ideal for Students. Attractive pay. Everyday of the week.Close to Jaffna University Precinct. pleaseContact us on 077 712 2032 (5064)

## வேலைவாய்ப்பு

Marketing Executive
Office Assistant
Driver (சொந்த வாகனத்துடன்) (C-246)

Uber Affiliate:
No.197B, Pungankulam Road, Jaffna

070 500 2051
076 897 2043

## வேலைவாய்ப்பு

**உதவியாளர்கள் தேவை**

பொருட்களை விநியோகம் செய்யும் வாகனத்திற்கு உதவியாளர், பண வசூலிப்பாளர் தேவை. (25-45 வயதிற்குட்பட்டவர்கள்)

**கணக்காளர்**

A/L படித்த quickbook மென்பொருளில் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

குறிப்பு : திருநெல்வேலி, கோண்டாவில் அண்மித்த பகுதிகளில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. (5067)

076 328 0381

## வகுப்புக்கள்

தரம் 6 - 11 கணித, விஞ்ஞான பாட அதிசிறந்த பெறுபேற்றைப் பெற தொடர்பு கொள்ளுங்கள் (1451)

076 438 1729

யாழ்ப்பாணம், வேலணை, சாவகச்சேரி சுன்னாகம், சங்கானை

## காணி வீடு விற்பனை கொள்வனவு

யாழ்ப்பாணம், தீவகம் மற்றும் பலாலி, A9, K.K.S, பருத்தித்துறை வீதிகளிற்கு அருகில் வீடு, காணி விற்கவுள்ள உரிமையாளர்கள் மற்றும் வாங்கவுள்ள வர்கள் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். (1452)

076 311 9485
076 050 3863

## ROOMS அல்லது முழுவீடும் நாள் வாடகைக்கு

திருநெல்வேலியில் ஒவ்வொரு Room இற்கும் தனித்தனி Toilet & Bathroom, AC வசதியுடன் Rooms நாள் வாடகைக்கு அல்லது முழு வீடாகவும் நாள் வாடகைக்குக் கொடுக்கப்படும். முழு வீடாக எடுப்பதாயின் முன் பதிவு செய்ய வேண்டும். (5069)

074 206 0576, 077 959 7158
0049 1634 4995 78

## வேலையாட்கள் தேவை

பூநகரியில் தென்னந்தோட்டத்தில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு வேலையாட்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (1449)

077 818 9450

## வீடு விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவலர் றோட் ஆனைப்பந்தி சந்திக்கு அருகில் அமைதியான சூழலில் நவீன முறையில் 3 பரப்புடன் கூடிய Tiles பதிக்கப்பட்ட அழகிய வீடு விற்பனைக்குண்டு (1450)

தொடர்பு: 077 710 7771

## உடனடி வேலைவாய்ப்பு

❖ மேசன்

மேசன் மாதத்திற்கு (70 000 + மேலதிக நேரம் + மூன்று வேளை சாப்பாடு + 2 நாள் லீவு)

❖ உதவியாளர்கள்

ஆண்கள் விரும்பத்தக்கது.
உதவியாளர் சம்பளம் மாதத்திற்கு (60 000 + மேலதிக நேரம் + மூன்று வேளை சாப்பாடு + 2 நாள் லீவு) (1453)

தொடர்பு: 077 948 7659

सत्यमेव जयते

இந்திய துணைத் தூதரகம்
யாழ்ப்பாணம்

வழங்கும்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா 2025

கலாநிதி நித்தியஸ்ரீ மகாதேவன்

அவர்களின்

# தெய்வீக இசைக்கச்சேரி




திரு. எம் ஏ. கிருஷ்ணசாமி


திரு. ராஜாராம் நிலமணி


திரு.ஸ்கந்த சுப்பிரமணியன் சுந்தரராஜன்

இடம் : யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம்

காலம் : 19 ஆகஸ்ட், 2025 (செவ்வாய்க்கிழமை)

நேரம் : மாலை 7.00 மணிக்கு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அனுமதி இலவசம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல்களை புதைக்கலாம் உண்மைகளை புதைக்க முடியாது!

## சட்டத்தரணி ரணிதா ஞானராஜ்



(கொழும்பு) ..............................

**உடலங்களை புதைக்கலாம், ஆனால் ஒரு காலமும் உண்மைகளைப் புதைக்க முடியாது என, செம்மணி வழக்கில் பாதிக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி ரணிதா ஞானராஜ் தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற செம்மணி நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்துக் கொண்டு கருத்துரைத்தப் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

புதைக்கப்படாத என்புக் கூடுகளும் ஆன்மாக்களும் நிலத்தை கிழித்துக் கொண்டு உண்மைகளை உலகுக்குச் சொல்ல வெளிவருவதாகவும் ரணிதா இதன்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமது அன்புக்குரியவர்களைத் தேடி அலைந்து மாத்திரமின்றி, விசாரணைகள் மற்றும் சாட்சிப் பதிவுகள் என பல இடங்களுக்கு அலைந்து திரிந்து மக்கள் களைப்படைந்து விட்டனர்.

உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்து 16 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதிலும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி இதுவரை பெற்றுக்கொடுக்கப்படவில்லை.

எனினும் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது? யாரால் நடத்தப்பட்டது? அவர்களின் பெயர் விபரங்கள், பதவி நிலை என அனைத்து விடயங்களையும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நன்கறிந்துள்ளனர்.

இறுதி யுத்தத்தின் போது இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்தவர்களும், சோதனைச் சாவடிகளில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்களும் என பல்வேறு சந்தர்ப்பங்களில் இலட்சக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான புள்ளிவிபரங்கள் அனைத்தும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மற்றும் சாட்சிப் பதிவுகளில் உள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதை குழிகளில் மீட்கப்பட்டுள்ள என்புக்கூடுகள் தொடர்பான விசாரணைகள் மிகவும் தாமதமாகவே முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த விடயம் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளும் பல வருடங்களாக தாமதமாகியுள்ளன. பாதிக்கப்பட்டவர்கள் நீதியை கோரி 16 வருடங் களாக பரிதவித்து நிற்கின்றனர்.

இந்நிலையில், சுயாதீன விசாரணைகளின் ஊடாக பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்க விரைவான செயற்பாடுகள் அவசியம் என செம்மணி வழக்கில் பாதிக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி ரணிதா ஞானராஜ் வலியுறுத்தியுள்ளார். (நி)

## வதந்திகளைப் பரப்பி ஆட்சியைப் பிடிக்க கனவு காணும் எதிர்க்கட்சி- பிரதமர் சாட்டையடி



(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசுக்குள் குழப்பம் என்று வதந்திகளைப் பரப்பி ஆட்சியைப் பிடிக்கலாம் என்று எதிர்க்கட்சிகள் கனவு காணக்கூடாது.

நாட்டு மக்களின் அமோக ஆணையைப் பெற்ற இந்த அரசை எந்தச் சக்தியாலும் அசைக்கவே முடியாது என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமரை மாற்ற வேண்டுமா, இல்லையா என்பதை ஜனாதிபதிதான் முடிவு செய்ய வேண்டும். இந்த விடயத்தில் எதிர்க்கட்சிகளுக்கு என்ன அவசரம்?

பிரதமர் பதவியை நான் எந்தச் சந்தர்ப்பத்திலும் துஷ்பிரயோகம் செய்யவில்லை. ஜனாதிபதி என் மீது வைத்துள்ள நம்பிக்கையை நான் கேள்விக்குட்படுத்தவில்லை.

ஜனாதிபதியும், தேசிய மக்கள் சக்தி அரசும் என் மீது அழுத்தங்கள் எதனையும் இதுவரை பிரயோகிக்கவில்லை.

ஆனால், எதிர்க்கட்சிகள் வதந்திகளை வெளியிட்டு வருகின்றன.

இது தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசு.

இந்த அரசுக்குள் குழப்பம் என்று வதந்திகளைப் பரப்பி ஆட்சியைப் பிடிக்கலாம் என்று எதிர்க்கட்சிகள் கனவு காணக்கூடாது என பிரதமர் தெரிவித்தார். (நி)

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 - 11 - 1946



மறைவு 13 - 08 - 2025

### திருமதி.தம்பிராசா பத்மாதேவி

யாழ் சண்டிலிப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும் வவுனியா தோணிக்கல்லை வசிப்பிடமாகவும் கனடா Scarborough வை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா பத்மாதேவி அவர்கள் 13.08.2025 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் பறுவதம் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற தம்பிராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கமலாதேவி, தெய்வேந்திரம், இரங்கநாதன், இரவீந்திரன் மற்றும் சிறீபவன், லீலாதேவி, பகீரதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராசரட்ணம், சரஞ்வதிதேவி (லண்டன்), ருக்குமணிதேவி, புவனேஸ்வரி, ஜெயதேவி, கந்தசாமி (ஓய்வு நிலை மக்கள் வங்கி முகாமையாளர்), தனபாக்கியம், காலஞ்சென்றவர்களான பொன்னையா, இராசதுரை, சிவஞானம், தவமணி, யோகலட்சுமி, மற்றும் பாலச்சந்திரன் (கனடா) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற தங்கரத்தினம், அற்புதமேரி, செல்வம் (கொழும்பு), காலஞ்சென்றவர்களான தியாகராஜா, திருச்செல்வம் மற்றும் சர்வேஸ்வரி (கனடா) ஆகியோரின் சகோதரியும், கெங்காதரன் (சுவிஸ்), காலஞ்சென்ற மனோகரன், தவறஜனி (சுவிஸ்), தயாளினி (இலங்கை), அமுதாகரன் (கனடா), சசிகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், றமணி (சுவிஸ்), சிவகுமாரி (கனடா), பரமேஸ்வரலிங்கம் (சுவிஸ்), சிவானந்தன் (இலங்கை), றதீபா (கனடா), வினோஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், செந்தூரன் (பிரான்ஸ்), பிருந்தாபன் (இலங்கை), அரவிந் (சுவிஸ்), அஜித் (சுவிஸ்), கீர்த்தன் (சுவிஸ்), எரோன் (கனடா), அசீஸ் (கனடா), அனோஜ் (கனடா), அஸ்வின் (கனடா), தர்சனா (இலங்கை), பிரணவி (பிரான்ஸ்), திலக்சா (சுவிஸ்), ராகவி (சுவிஸ்), ஆர்த்திகா (சுவிஸ்), அரிக்சா (கனடா), அஸ்விகா (கனடா) ஆகியோரின் பேர்த்தியும், ரிஷாந் (இலங்கை), கவினாஸ் (இலங்கை), சயானா (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.08.2025 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் சண்டிலிப்பாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்தில் நண்பகல் 12.00 மணியளவில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(1442) தகவல்: குடும்பத்தினர் 077 716 9817

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் - 06.01.1976

மறைவு -15.08.2025

யாழ்.போதனா வைத்தியசாலையின்
சத்திரசிகிச்சை நிபுணர்

**Dr.வெங்கடாசலம் சுதர்சன்**



எம்மிடம் கல்வி கற்றவனின்
உயர்வைக் கண்டு
இறுமாப்படைந்தோம்.
இழப்பு செய்தி கேட்டு குமுறுகிறோம்.

ஆசிரியர்கள்
A.கலைச்செல்வன், T.தவசேகர்,
R.ராஜேஸ்வரன்,
கமலநாதன் கல்வி நிலையம் அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 506
17.08.2025


# வரலாற்று வாய்ப்பை பயன்படுத்துமா இலங்கை?

அபிமன்யு



> உலகின் பல்வேறு பகுதிகளில் போர் நடந்திருந்தாலும் தனது சொந்த நாட்டு மக்களை அழிக்கும் செயல் பெரும்பாலாக எங்கும் நடந்திருக்கவில்லை. இதில் இலங்கை முதன்நிலையில் நிற்கிறது.

தனது சொந்த நாட்டு மக்களான ஈழத்தமிழினத்தை கொன்று குவித்த பெருமை காலம் காலமாக வந்த இலங்கை ஆட்சியாளர்களையே சாரும்.

தனிச் சிங்களச் சட்டம் முதற்கொண்டு ஜூலை கலவரம், யாழ் நூலக எரிப்பு, உள்நாட்டுப் போர் என தமிழினம் தொடர்ச்சியாக அழித்தொழிக்கப்பட்ட வரலாறுகளை புரட்டிப் பார்ப்பது காலத்தின் தேவை.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த இறுதி யுத்தத்தில் அப்பாவிப் பொதுமக்களை இலக்குவைத்துத் தாக்கி அழித்தமைக்கான சாட்சிகள் பரந்து விரிந்து கிடக்கின்ற போதும் இலங்கை சர்வதேசத்திடமிருந்து இலாவகமாகத் தப்பித்து வருவது வியப்பிற்குரியது.

சர்வதேச விசாரணை என்ற பேச்சுக்கே இடம் இல்லை என இறுமாப்புக் கொள்ளும் ஆட்சியாளர்கள் 16 வருடங்கள் கடந்த நிலையில் கண்ட முன்னேற்றம் என்ன என்பதே இங்கு கேள்வி.

ஒரு இனத்திற்கு இழைக்கப்பட்ட இன்னல்களுக்கு எந்தவித உபாயத்தையும் மேற்கொள்ளாது. இனவாதத்தினூடான சித்தாந்தத்தைக் கடைப்பிடிப்பது அறமான செயல் அல்ல.

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் எனின் அதில் அப்பாவிப்பொது மக்கள் கொல்லப்படுவதை ஏற்றுக் கொள்ளலாமா?

அவ்வாறெனின் அது சர்வதேச போர் விதிகளுக்கமைவான போர் என ஏற்றுக்கொள்ளலாமா?

இறுதி யுத்தத்தில் சர்வதேசப் போர் சட்டவிதி முறைகள் மீறப்படவில்லை என்பதை எவ்வாறான அளவுகோலினூடாக அளக்கப்பட்டது.

இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டியவர்கள் பதில்சொல்லியாக வேண்டுமே தவிர, பயங்கரவாதத்தை அழிக்கப் பாடுபட்டவர்களைக் காட்டிக் கொடுக்க மாட்டோம் எனக் கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாது.

இலங்கை விவகாரம் இற்றைக்கு 15 ஆண்டுகளாக சர்வதேச அரங்கில் பேசப்பட்டு வருகிறதே தவிர, அதற்கான நகர்வுகள் இஞ்சியளவேனும் நகரவில்லை என்பதுதான் உண்மையானது.

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை கூட்டத்தொடர் ஆரம்பமாகும் போது "இம்முறை இலங்கையின் கழுத்து இறுகும்" என சர்வதேச ஊடகங்களில் வெளியாகும் செய்தியிடலை நம்பி தமிழ் மக்கள் காத்திருக்க, அந்தக் காத்திருப்பு வெறும் காலம் கடந்ததாகியதே தவிர பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைத் தரவில்லை.

இவ்விடயத்தில் சர்வதேசம் விலாங்குகளாய் செயற்படுகிறதோ என தமிழ் மக்கள் நினைக்கின்றனராயினும் சர்வதேசத்தைத் தவிர்த்து தமக்கான நீதியை வேறு யாராலும் பெற்றுத்தர முடியாது என்பதையும் அவர்கள் உணர்ந்துள்ளனர்.

போர் நிறைவுற்று பௌதீக வளங்கள் உயர்வு பெறுகின்றதாயினும் தமிழினத்தின் மன வடுக்களில் மாற்றம் இல்லை. அது இற்றைக்கு 16 வருடங்களுக்கு முன் எவ்வாறிருந்ததோ அவ்வாறே இன்றுவரை இருந்து வருகிறது.

தமிழினத்தின் இந்த இன்னல் நிலைக்கு சரியான தமிழ் தலைமை இல்லாததும் பெரும் குறையே.

தமிழினம் யாரை தமது ஏக பிரதிநிதிகள் எனக் கருதினரோ, அவர்கள் தமிழினத்தின் மீதும் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் அக்கறை காட்டாமல் வெறும் வெற்று வார்த்தைகளையும், அறிக்கைகளையும் வெளியிடுவதை வழமையாகக் கொண்டனர்.

தவிர, இலங்கை அரசிற்குப் பொறுப்புக்கூற அவகாசம் வழங்க வேண்டும் என சர்வதேச அரங்கில் நின்று கூறி மாபெரும் இனத்துரோகத்தை இழைத்தனர்.

தமிழினம் தெளிவடையாமல் மீண்டும் மீண்டும் அவர்களின் வெற்று வார்த்தை யாலத்தை நம்பி ஏமாந்து போயின. கால ஓட்டத்தில் இவர்களின் சாயம் வெளுத்துப்போன தன் விளைவே கடந்த பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் பிரதிபலித்தன.

இப்போது சர்வதேசத்திடம் சர்வதேச விசாரணை தேவை எனக் கேட்பவர்கள் அப்போதே கேட்டிருப்பார்களாயின் ஒருவேளை தமிழினம் இப்போது நிம்மதியாய் இருந்திருக்க வாய்ப்புக்களிருந்திருக்கும். என்ன செய்வது. தமிழினத்தின் விதி அதை மாற்றியமைத்துவிட்டது என்று கூறுவதைவிட வேறு எதைக் கூறிவிட முடியும்.

நிலை இவ்வாறு இருக்கையில் இப்போது செம்மணிப் புதைகுழி விவகாரம் சர்வதேசத்தின் பார்வைக்குச் சென்றிருக்கின்றது.

இதன் வெளிப்பாடு, கடந்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக் செம்மணிப் புதைகுழிப் பகுதிக்கு விஜயம் செய்திருந்தார்.

அவரின் செம்மணிப் புதைகுழி பகுதிக்கான விஜயம் அவரின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்பியிருப்பதை அவரின் அறிக்கையிடல்கள் வெளிப்படுத்தியிருக்கின்றன.

செம்மணிப் பகுதியில் புதையுண்டவர்களுக்காக அங்கு ஏற்றப்பட்டிருந்த "அணையா விளாக்கு" திடலுக்குச் சென்று இறந்தவர்களுக்காக அஞ்சலி செலுத்தியமை தமிழர் மனங்களில் புதுத்தென்பை ஏற்படுத்தியிருக்கின்றது என்றே கூற வேண்டும்.

அங்கு உரையாற்றிய அவர் காணமல்போதல்என்பது மிகக்கொடுமையானது. காணாமல் போனவர்களின் உறவுகளின் கண்ணீரைப் பார்க்கும்போது நானும் அவர்களில் ஒருவராய் மாறிவிட்டேன் என அவர் கூறியது நிச்சயம் அவரின் இதயத்திலிருந்து எழுந்த வார்த்தைகளே.

ஐக்கிய நாடுகள் சபை அமர்வு ஆரம்பமாகவுள்ள நிலையில் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் இலங்கை தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருப்பது இலங்கை ஆட்சியாளர்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

உள்நாட்டுப் போரில் இடம்பெற்ற குற்றங்கள் உட்பட கடுமையான மனித உரிமை மீறல்களுக்கு தாமதமின்றி நீதியை வழங்கவும், கடந்த கால வரலாற்றில் ஒரு காத்திரமான மாற்றத்தை ஏற்படுத்தவும் இலங்கை அரசாங்கத்திற்கு வரலாற்று வாய்ப்பு கிட்டியுள்ளது.

எனவே போர் குற்ற, மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறலை இலங்கை அரசு மேற்கொண்டு பாதிக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழினத்திற்கு நீதியை வழங்க வேண்டும் என அவரின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐ.நா ஆணையாளர் கூறியது போல நிச்சயம் இது பொன்னான வாய்ப்பே. ஆயினும் இனவாதிகளின் வெறும் வாய்க்கு இது அவலாக மாறியுள்ளது. பொறுப்புக்கூறல் தொடர்பிலும் போர் குற்ற மீறல்கள் தொடர்பிலும் சர்வதேசத்தின் நிலைப்பாட்டை மறுக்கின்றோம் என அரசாங்கத்தினரும் எதிர்க்கட்சியினரும் கூட்டாக கூறத் தொடங்கிவிட்டனர். தவிர, உள்ளகப் பொறிமுறையூடாக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனக்கூறி வருகின்றனர்.

இவ்விடத்தில் ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும். அதாவது, "தன்னிலை உணர்தல்" என்ற சொல்லிடல் ஒன்று உண்டு. இதை இன்றும் இலகுவாக்க கூறின், "தலையிடி, காய்ச்சல் தனக்குத் தனக்கு வந்தால்தான் தெரியும்" என்பார்கள். இழப்புக்களைச் சந்தித்தவர்களுக்கே இழப்பின் வலியும் வேதனையும் புரியும்.

போர்க்குற்ற மீறல்கள் எவையும் நடைபெறவில்லை என அடித்துக் கூறுபவர்களினால் மேற்கொள்ளப்படும் உள்ளக விசாரணைகள் எவ்வாறு நம்பகத்தன்மையுடையதாய் இருக்கும்என்ற ஐயம்தமிழ்மக்களிடம் எழுந்ததில் தவறேதும் இல்லையே. இதனாலேயே தமிழினம் சர்வதேசத்தின் தலையீட்டை விரும்புகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார், யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் பொது சத்திர சிகிச்சை நிபுணர் வெ.சுதர்சன் அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தியறிந்து மிகுந்த துயரடைகின்றோம்.

அவரின் மறைவு பேரிழப்பு. எங்கள் மண்ணில் இருந்து சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டு உயிர் காத்த மருத்துவ நிபுணரின் மறைவு ஈடு செய்ய முடியாதது.

அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது.

அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** வைத்திய நிபுணர் சுதர்சன் அவர்களின் திடீர் மறைவு பலரிடமும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு கணப் பொழுதில் ஒரு பெரும் சத்திர சிகிச்சை நிபுணரைப் பறிகொடுப்பதென்பதை ஒரு போதும் ஜீரணிக்க முடியாது.

அதிலும், கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின்ர கருத்தரங்குக்குச் சென்ற வேளை, மூன்று மாடிக் கட்டடத்திற்கு ஏறிச் சென்றதாலதான் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதாக அறிந்தன்.



சத்திர சிகிச்சை நிபுணர் வெ.சுதர்சன்

அங்கு லிப்ற் பழுதாகிய காரணத்தால மூன்றுமாடி ஏற வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டு ஒரு வைத்திய நிபுணரின்ர உயிரைப் பறிச்சுப் போட்டுது.

பொதுவில எங்கட நாட்டில நிர்வாகம் என்பது செலுட்டுத் தனமாகத் தான் இருக்குது.

அதிலும் எதைப் பொருத்தினாலும் அது பழுதடைந்து போவது எங்களைப் பிடித்த பெரும் தோசம்.

இதற்குக் கருவிகளை இயக்குவதிலும் அவற்றைப் பராமரிப்பதிலும் போதிய தொழில் நுட்ப அறிவு இல்லாதது தான் மூலகாரணம்.

ஆகையால பராமரிப்பு என்ற விடயத்தில எங்கட நாடு மிகவும் கவனம் செலுத்த வேணும்.

இவ்வாறு விதானையார் கூற, ஆலடி அப்படியே நிசப்தமாகியது. நிசப்தத்தைக் கலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:-** அது சரி இராஜாங்க அமைச்சராக இருந்த லொஹான் ரத்வத்த இறந்துவிட்டார் என்று அறிந்தன்.

மகிந்த ராஜபக்ஷவின்ர ஆட்சியில இராஜாங்க அமைச்சராக இருந்த லொஹான் ரத்வத்த சிறைச்சாலைக்குச் சென்று, தமிழ் அரசியல் கைதிகளை நிலத்தில குந்த வைத்து, அவர்களின்ர தலையில துவக்கை வைத்து சுடுவன் எண்டு வெருட்டினவர்.



## வைத்திய நிபுணர் சுதர்சனின் மறைவு எமக்குப் பேரிழப்பாகும்

முன்னாள் பந்தோபஸ்து அமைச்சராக இருந்த அனுருத்த ரத்வத்தயின் மகனான லொஹான் ரத்வத்த இப்ப இல்லை. இது தான் உலகம்.

மரணம் மற்றவர்களுக்குத் தான் எண்டு நாங்கள் நினைக்கிறம். ஆனால் மரணம் எங்களுக்கும் உரியது. அது இன்றோ நாளையோ என்பது தான் எமக்குத் தெரியாமல் இருக்குது.

**மூப்பர்:-** சாத்திரியார் சொல்லுறது தான் யதார்த்தம்.

லொஹான் ரத்வத்தயின்ர மரண வீட்டிற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும் அவரது மகன் நாமல் ராஜபக்ஷவும் போனவர்கள்.

மகிந்தவை சிலர் கையில பிடித்துக் கொண்டு போனதைப் பார்த்தன்.

எத்தனை உயிர்களின்ர சாபம் ஒரு போதும் சும்மாவிடாது.

**கங்காணி:-** அது சரி பண்டிதர் ஐயா! யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில நடந்த ஆறாவது சர்வதேச தமிழியல் மாநாட்டிற்குப் போகவில்லையோ.

**பண்டிதர்:-** தமிழுக்கு விழா எடுக்கும் போது அங்க போகாமல் இருக்க முடியுமோ. மாநாட்டிற்குப் போனனான்.

கைலாசபதி கலையரங்கு முழுமையிலும் அறிஞர்களும் மாணவர்களும் இருந்தனர். அதை முதலில கூறித்தானாக வேண்டும்.

அதேநேரம் எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசா அவர்கள் ஆழ்வார்கள் அருளிய திவ்ய பிரபந்தங்களை எடுத்துக் கூறி, சபையைத் திகைப்படைய வைத்தார்.

ஆழ்வார்கள் அருளிய திவ்ய பிரபந்தங்களில்; ஒரு கணிதப் பேராசிரியரான துணைவேந்தர் சிறிசற்குணராஜா அவர்கள் கொண்டிருந்த நிபுணத்துவத்தையும் எங்கள் தமிழரின் வரலாறு குறித்து கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் ஆற்றிய உரையும் தன்னைத் திகைக்க வைத்ததாக தமிழகத்துப் பேராசிரியர் அரங்க.இராமலிங்கம் அவர்கள் கூறி, இது யாழ்ப்பாணத்தின் தனிப் பெருமை என யாழ். மண்ணைப் புகழ்ந்துரைத்த போது, சபையில் இருந்து ஒலித்த கரகோசம் உண்மையிலேயே என்னை நெகிழச் செய்தது.

இதற்காக மாநாட்டை சிறப்புற ஏற்பாடு செய்த யாழ்.பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் உள்ளிட்ட தமிழ்த் துறையினர் அனைவரையும் பாராட்ட வேணும்.

இருந்தும் ஒரு குறையை இங்கு கூறித்தானாக வேண்டும்.

கைலாசபதி கலையரங்கில தமிழியல் மாநாடு நடைபெறும் போது, யாழ்.பல்கலைக்கழக நுழைவாயிலில் வாழைக் குலை மற்றும் மகர தோரணங்கள் கட்டி எங்கள் தமிழ்ப் பண்பாட்டின் கோலங்களை வெளிப்படுத்தியிருந்தால், சர்வதேச தமிழியல் மாநாடு இன்னும் கனதியாக இருந்திருக்கும்.

ஏனோ தெரியவில்லை.தமிழியல் ஆய்வு மாநாடு நடைபெறும் போது, **கலைவாரம்** என்ற பதாகை தான் நுழைவாயிலில பொருத்தப்பட்டிருந்தது.

இதைப் பார்த்த போது, தமிழியல் மாநாடு நடத்துவதற்கு கலைப்பீடத்தில சில எதிர்ப்பு இருந்ததோ என்று எண்ணத் தோன்றியது.


சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாடு நடக்கும் போது, நுழைவாயிலில் கலைவாரம் என்ற பதாகை கட்டப்பட்டுள்ளதெனில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில தமிழ் விழாவுக்கு எதிர்ப்பு உளது போல நிலைமை உணரப்படுகிறது.

ஆகையால், இனி மேலாவது தமிழ் மாநாடு நடைபெறும் போது, நுழைவாயில் அலங்காரம் குறித்து அனைவரும் கவனம் செலுத்த வேணும். இவ்வாறு பண்டிதர் கூற,

அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கூலி படம் எப்படி இருக்கிறது வியாசரே?



# வியாசர் பதில்கள்



வியாசருக்கு இயற்கை விவசாயத்தில் ஆர்வம் உண்டா?

**ஈழத் தமிழினத்தின் மீது மேற் கொள்ளப்பட்ட காட்டுமிராண்டித் தனங்களுக்கு நீதிகிடைக்குமெனநீர்நம்புகிறீரா வியாசரே?**

தமிழ்- யாழ்ப்பாணம்

போர் நிறைவுற்று 16 ஆண்டுகள் கடந்து விட்டன. இந்தப் பதினாறு ஆண்டுகள் சர்வதேசம் எதைப் பேசியதோ அதைத்தான் இன்று வரையும் பேசிக் கொண்டிருக்கிறது.

இந்த லட்சணத்தில் சர்வதேசம் தமிழினத்துக்கு நீதியைப் பெற்றுத் தரும் என நாம் பகல் கனவு காண்பது நல்லதல்ல.

ஐ.நா அமர்வு நெருங்கும் போது இலங்கை விடயத்தை கையில் எடுப்பதும் அது முடிந்த பின்னர் அதை மூடி வைப்பதும் பரீட்சைக்கு முதன் நாள் இரவு புத்தகம் படிப்பதற்கு ஒப்பானது என்பதை சர்வதேசம் விளங்கிக் கொண்டால் சரி.

**செம்மணிப் புதைகுழிக்கு நீதிகோரிய தொப்புள் கொடி உறவுகளான தமிழக உறவுகளின் போராட்டம் பற்றி?**

ரங்கநாத்- வவுனியா

ஈழத் தமிழினம் தொடர்பில் தமிழ் நாட்டு மக்கள் மிகுந்த புரிதல் வைத்திருக்கிறார்கள்.

இந்தப் பந்தம் இன்று நேற்று வந்த பந்தமல்லதாயினும் ஈழப் போராட்டம் தொடர்பிலும் அதன் ஆத்மார்த்தமான பேரன்பையும் தமிழ் நாட்டு மக்கள் மனங்களில் விதைத்த பெருமை செந்தமிழன் சீமானையே சாரும்.

அந்தளவிற்கு சீமான் ஈழத் தமிழர் விடயத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

அண்மையில் சென்னையில் செம்மணிப் புதை குழிக்கு நீதி கோரிய போராட்டம் ஒன்று சீமான் தலைமையில் நடைபெற்றது.

இதில் பல்லாயிரக்கணக்கானவர்கள் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.

**வரலாற்று வாய்ப்பை இலங்கை அரசு பயன்படுத்தும் என்று நினைக்கிறீரா வியாசரே?**

சுதன்-குப்பிழான்

ஏறு என்றால் எருதுக்குக் கோபம். இறங்கு என்றால் முடவனுக்குக் கோபம் என்ற நிலையிலேயே தற்போதைய அரசு இருக்கிறது.

அரசின் நகர்வுகளை சிங்கள மக்களுக்கு தவறாகப் புரிய வைத்து ஆட்சியைக் கவிழ்க்க எதிரணியினர் காத்திருக்கின்றனர்.

இந்த நிலையில் இந்த பொன்னான வாய்ப்பைப் பயன்படுத்த பின்னிக்கவே செய்யும் அரசு.ஏனென்றால்,சிங்கள மக்களை எதிர்த்து பெரும்பான்மை அரசு தமிழருக்கு எதையும் செய்துவிடாது.

அது குண்டு போடுவது முதற்கொண்டு.

**கூலி படம் எப்படி இருக்கிறது வியாசரே?**

ரஸ்மிகன்- யாழ்ப்பாணம்

கூலி திரைப்படம்1000 கோடி வசூலிக்கும் என இயக்குநர் கோரிக்கைகள் கூறியிருந்தமை அப்படத்தின் மீது பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

அவ்வாறான எதிர்பார்ப்புடன் கூலி படத்தைப் பார்க்கப் போனால் அவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சும்.சாதாரண ரஜினி படம் என நினைத்துப் படத்திற்குப் போனால் நிச்சயம் படம் தொடர்பில் திருப்தி கிடைக்கும்.

தற்போது வரை 200 கோடிகளுக்கு மேல் வசூலித்து விட்டது.

கலவையான விமர்சனம் இருந்தாலும் கூலி வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது.

350 கோடி பட்ஜெட். படம் ரிலீஷ் ஆக முன்னரே அத் தொகை கிடைத்துவிட்டது தயாரிப்பாளருக்கு.


அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை

076 097 3126

என்ற இலக்கத்திற்கு

SMS, Whats App செய்யுங்கள்


**அன்பு வியாசரே,சமஷ்டி தமிழரின் தீர்வா?**

குமார்- முகமாலை

பசிக்கிறது என்று அழும்பிள்ளைக்கு சோறு இல்லை என்பதற்காக பசியாற்றக் கூடிய பாணை வேண்டாம் என்று தவிர்ப்பது நல்லதில்லை.

அதுபோலத்தான் தமிழினத்தின் நிலைப்பாடும். தமிழினம் தற்போது இருக்கும் நிலையில் எதைத் தந்தாலும் ஏற்றுக் கொள்ளும்.

அந்தளவிற்கு அனைவரினாலும் ஏமாற்றப்பட்டுவிட்டது. எதுவும் இல்லாத தமிழினத்திற்கு சமஷ்டி கிடைத்தால் நிச்சயம் அதை தவற விடாது.

**வாழ்க்கையில் பற்றற்று இருப்பது சரியானதா வியாசரே?**

சிவம்- வதிரி

வாழ்க்கை நிச்சயமற்றது. யாழ்ப்பாணத்தின் மிகச் சிறந்த சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் சுதர்சன் அவர்கள் மாரடைப்பினால் உயிரிழந்துள்ளார். என்ற செய்தி அறியும் போது மனம் வலித்தது.இருப்பினும் சிலதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

வாழ்வில் பற்று வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் அதில் ஒரு சுவாரசியம் இருக்காது. உணவுக்கு உப்பு இடுவது எதனால் என்று எப்போதாவது எண்ணியதுண்டா?

உப்பு இல்லாத உணவை உங்களால் உண்ண முடியுமா? இது போலத்தான் வாழ்வும் பற்று வேண்டும். அந்தப் பற்றுத்தான் எம்மை இயங்க வைக்கும். அந்த இயக்கம் வாழ்வில் நல்ல தருமங்களைத் தரும்.

**வியாசருக்கு இயற்கை விவசாயத்தில் ஆர்வம் உண்டா?**

கிருஷ் - அல்லைப்பிட்டி

எம் முன்னோர்கள் நூறு வயதுவரை பிறசர்,சுகர்,கொலஸ்ரோல், கான்சர், வாதம், பித்தம் இல்லாமல் வாழ்ந்தனர் என்றால் அது எதனால் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

எனது தாத்தா சந்தைக்குச் சென்றால் பூச்சி அரித்த கத்தரிக்காயையும்,வண்டு தின்ற கீரையையும் தான் வாங்குவார்.

இதில் மருந்தடிக்கவில்லை என்று கூறுவதுடன் கிருமி நாசினி தெளித்த காய்கறியில் இருக்கும் நஞ்சுத் தன்மையில் துளியளவும் இல்லை பூச்சி அரித்த மரக்கறியில் என்பார்.

இயற்கையுடன் ஒன்றிப் போனால் இந்தப் பூமியில் நாம் நூறு வருடங்கள் வாழலாம் இல்லையேல் ஒரு நாள் கோழிக்குஞ்சுகளாய் பெருத்து 30 நாட்களில் இறைச்சியாக்கப்பட்டு விடுவோம்.

**போர்க்குற்ற மீறல்கள் நடந்ததா? நடக்கவில்லையா? வியாசரே?**

தர்மசீலன்- நீர்வேலி


போர் நடந்த இடமென்றால் புதைகுழி இருக்கத் தான் செய்யும். வன்னிப் பெரு நிலப்பரப்பில் இறந்த அனைவரும் பயங்கரவாதிகளே. பயங்கரவாதத்தை அழித்த வெற்றி வீரர்களை நாங்கள் காட்டிக் கொடுக்க மாட்டோம்.

சர்வதேச விசாரணை என்ற பேச்சுக்கே இடமில்லை.

இவ்வாறான சொற்பதங்களைக் கேட்டுக் கேட்டு தமிழ் மக்களுக்குக் காதுகள் புளித்து விட்டது.மேற்கண்ட சொற்பதங்களை போர்க்குற்றம் நடக்கவில்லையென்றால் ஏன் கூறுகின்றார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம்





முனைவர்
ஸ்ரீ. வளர்ராஜென்

எனக்கு 77 வயது. மனைவியை இழந்து பத்து வருடங்களாகிறது. அன்பின் நீரூற்றை மறந்த எத்தனையோ முதியவர்களில் நானும் ஒருவன்

இருக்கின்ற நான்கு மகன்களில் ஒவ்வொரு மாதமும் ஒரு மகனிடம். இப்போது இருப்பது மூன்றாவது மகனிடம்.

இன்னும் நான்கு நாட்கள் இருக்கிறது கடைசி மகனிடம் செல்ல. இப்போதிருந்தே வயதான விரல்களை கொண்டு எண்ணிக் கொண்டு இருக்கிறேன் கடைசி மருமகளிடம் செல்லும் நாட்களுக்காக.

போன தீபாவளிக்கு இரண்டாவது மருமகள் வாங்கித்தந்த வெள்ளை வேட்டி பழுப்பு நிறமாகி பல நாட்கள் ஆகிவிட்டது.

முதல் மகன் வாங்கித் தந்த கண்ணாடி உடைந்து மூன்று வாரங்கள் ஆகிவிட்டது,

இப்போது இருக்கும் கோபக்கார மகனிடம் கேட்டால் என்ன சொல்வானோ என்று பயந்து கண்ணாடியை ஒளித்து வைத்து விட்டு வெறுங்கண்களோடு தடுமாறிக் கொண்டு இருக்கிறேன்.

கடைசி மருமகளிடம் சொல்லித்தான் மாற்றிக்கொள்ள வேண்டும். இன்னும் நான்கு நாட்கள் தான் என்பதால் எல்லோரும் வேலைக்கு போன பின்பு என்னுடைய வேட்டி ஜிப்பாக்களை துவைத்து வைத்துக் கொள்ள வேண்டும்,

துணி துவைக்கும் மிஷின் இருந்தாலும் என்னுடைய துணிகளை தனியாகத்தான் போடவேண்டும் என்று சொல்லி அவர்களின் ஆடையோடுகூட ஒட்டவிடாமல் ஏனோ அந்நியமாக வைத்திருக்கிறாள்.

கஷ்டமாக இருந்தாலும் மகனிடம்கூட எதுவும் சொல்வதில்லை, மருமகளும் சொல்ல விடுவதில்லை.

இன்னும் நான்கு நாட்கள்தானே என்று

ஹாஸ்டலில் இருந்து ஆசையோடு வீட்டுக்கு ஓடும் குழந்தையைப்போல் கடைசி மருமகளின் வீட்டுக்குப் போக என்னுடைய உடைகளை நானே ஆர்வமாக துவைத்து கொண்டிருக்கிறேன்.

கடைசி மகன் மற்றவர்களை போல் கார், சொந்த வீடு என்று வசதியாக இல்லை. வாடகை வீடு தான், இரண்டு பேருக்கும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் இருக்கிறது.

நான் ஊருக்கு போகும் போதெல்லாம் மருமகள் தான் ஸ்கூட்டர் எடுத்துக் கொண்டு பஸ் ஸ்ராண்டு வருவாள்.

அந்த ஸ்கூட்டரில் உட்கார்ந்து கொண்டு போவதில் அப்படி என்ன ஆனந்தமோ எனக்கு தெரியாது.

என்னென்ன நடந்தது என்று அவள் கேட்டுக்கொண்டே போக நான் பின்னால் உட்கார்ந்து வேடிக்கை பார்த்தபடி யாரைப் பற்றியும் எந்த குறையும் சொல்லாமல் நல்லதை மட்டுமே சொல்லிக்கொண்டு போவேன்.

அவள் கெட்டிக்காரி என்பதால் போகும் வழியில் எனக்கு பிடித்த சர்பத் வாங்கிக் கொடுத்து வேடிக்கை பார்க்கும்போது கண்டுபிடித்து விடுவாள்.

வீட்டுக்குப் போனதும் கட்டைப்பையை ஆராய்ச்சி செய்து மருந்து மாத்திரைகளாவது சரியாக வாங்கி கொடுத்திருக்கிறார்களா என்று தேடிப் பார்த்து திட்டுவாள்.

அதில் அவளுக்கு பிடித்த பாதுஷா சுவீட்டை நான் வாங்கி வந்திருப்பதை பார்த்து சிரித்து விடுவாள்.

இவளை ஏன் எனக்கு மகளாக பெற்றுத் தரவில்லை என்று மீனாட்சியிடம் சண்டை போடக்கூட அவள் அருகில் இல்லாமல் எனக்கு முன்னால் போய்ச் சேர்ந்துவிட்டதில் நிறைய வருத்தம் எனக்கு.

நான்கு நாட்கள் கழித்து பஸ்ஸில் போய் இறங்கினேன். எப்போதும் போல் எனக்கு முன்வந்து காத்திருந்தாள்.

ஓடிவந்து பையை வாங்கிக் கொண்டாள். ஸ்கூட்டரில் பத்திரமாக உட்கார வைத்துக் கொண்டாள்.

உங்களை ஷேவிங் செய்யக்கூட கூட்டிட்டு போக நேரம் இல்லையாமா அவர்களுக்கு? அவ்ளோ பெரிய ஆளுங்களா ஆயிட்டாங்களா எனும் போதே அதெல்லாம் இல்லம்மா ரெண்டு பேரும்....

என்று ஆரம்பிக்கும் போதே இப்படியே பேசி பேசி அவங்களை காப்பாத்திட்டு இருக்காதீங்கப்பா. பேசாம வாங்க என்று சர்பத் கடைக்கு போவதற்குள் சவரக்கடைக்குதான் அழைத்துச் சென்றாள்.

கண்ணாடி என்ன ஆச்சி என்று முறைத்தாள். பெயிலான மார்க் சீட்டை காட்டும் குழந்தையைப் போல் தயங்கித் தயங்கி ஒரு பக்கம் உடைந்த கண்ணாடியை காட்டினேன். கோபத்தை வெளிக்காட்டாமல் கண்ணாடி மாற்ற அழைத்து சென்றாள். இதுக்குதான் உங்களை அனுப்ப மாட்டேன்னு சண்டை போடுறது புரியுதாப்பா.. என்று முறைத்தாள். என்னிடம் பதிலில்லை.

ஊர் உலகத்துல யாரும் எதுவும் சொல்லிடக் கூடாதுன்னு பெருமைக்கு கூட்டிட்டு போறது அப்புறம் உங்களை கஷ்டப்படுத்தி அனுப்புறது.

இதே வேலையாப் போச்சி எல்லாருக்கும், என்று முணுமுணுத்துக்கொண்டே

கண்ணாடியை மாற்றிக் கொடுத்தாள், துணியெல்லாம் சுத்தமா துவைச்சிருக்கே நீங்கதானே துவைச்சீங்க, பொய் சொல்லாம சொல்லுங்க என்று டீச்சரை போல் முறைக்க என்ன செய்வது என்று தெரியாமல் பாதிப் பற்களோடு சந்தோஷமாய் சிரித்தேன். அவளும் சிரித்து விட்டாள்.

எனக்குத் தேவையான எல்லாவற்றையும் வாங்கி பையை நிரப்பிக்கொண்டு வீட்டுக்கு அழைத்து சென்றாள்.

ஸ்கூட்டரில் உட்கார்ந்து செல்லும்போது, லேசா மயக்கமா இருக்கு சாஞ்சிக்கட்டு மாம்மா என்று கேட்டேன்.

"கொஞ்ச தூரம் தான்பா போயிடலாம் பத்திரமா சாஞ்சிகோங்க" என்று சொல்ல மெதுவாக சாய்ந்து கொண்டேன்.

உண்மையில் எனக்கு மயக்கமெல்லாம் இல்லை, நான் பெறாத மகளின் மீது சாய்ந்து கொள்ள ஆசையாக இருந்தது, அதனால்தான் பொய் சொல்லி சாய்ந்து கொண்டேன்.

இன்னும் ஒரு மாதத்திற்கு அவளின் செல்லத் திட்டுகளுக்கு நடுவில் காணாமல் போகும் என் முதுமையின் ஊமைக் காயங்கள்.

# கவிதைக் கலசம்

## சொல்வதைக் கேள்



எத்துவார் புத்தி கேளாதே!
சித்தம் கலங்கி வாழாதே!
கோலங்கள் கண்டு மயங்காதே!
பற்றிடும் போதையில் ஏறாதே!
குற்றச் செயல்களைச் செய்யாதே!
உற்ற நோய்களில் வேகாதே!
பெற்றவர் வாக்கை மீறாதே!
கற்றவரை நாடி கல்வி பெறு,
நற்பண்புகளுடன் வாழ்ந்து காட்டு!
திடமாய் நற்பணி செய்து காட்டு!
பெற்றிடுவாய் பெருமை மண்ணுக்கு!
காலம் உனைச் சுமக்கும் சென்னியிலே!

**மா.ஆனந்தராசன்**
**(மானந்தன்) அல்வாய்**

## தேர்தலுக்கான காத்திருப்பு



குண்டுகள் ஓய்ந்து கனகால மாச்சு
எங்கள் வீதிகள் குன்றும் குழியுமாய் போச்சு
குடியிருக்கும் குடிசைகளும் கண்ணாடி யாச்சு
முரட்டுப் பாதைகளும் இருட்டாய்ப் போச்சு
விலைவாசி உயர்வது விண்ணைத் தாண்டுது
வாக்குறுதிக் காகிதங்கள் காற்றில் பறக்குது
அவலங்கள் நீளுது இன்னுமது தீரவில்லை
அரசியல் வாதிகள் யாரையும் காணவில்லை
நாளைக்கும் நம்மிடம் வருவார்கள் - அந்த
நாளுக்காய் நாங்களும் காத்திருப்போம்.

**சாந்தையூர் விளினிஸ் - பண்டத்தரிப்பு**

## கலக்கும் கந்தர்...



அந்தியேட்டி வீடுசென்ற கந்தருமோ உண்டவுடன்
வந்ததுவே வாயாறப் பாயாசம் - சிந்தித்தார்
செத்தவர்க்கு சாப்பாடு சீராக இல்லாது
கத்தாது போனதுவே காற்று.

செத்தவீட்டில் கொண்டாட்டம் வான்வெடியும் ஏராளம்
செத்த பிணம் முன்னாடி பேயாட்டம் - செத்தவரால்
கந்தரது ஆத்மாவும் சாந்தியுறச் சாப்பிட்டு
வந்தாரே கோப்பையோடு வீடு.

**கவிவேந்தர் பொன்.சுகந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதம் தோற்கடிக்கப்பட்டுவிட்டதா...?

**அனைத்து இன, மத சமுகத்தவர்களையும் சகல ஒடுக்கு முறைகளுக்கும் எதிராக கருத்தியல் ரீதியாக அரசியலில் மயப்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தினால் தான் இனவாதத்தை தோற்கடிக்க முடியும்.**



கந்தர்மடம் புத்த விகாரையைத் தொடர்ந்து செம்மணிப் புதைகுழி எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து இனவாதிகளின் கூச்சல், கூப்பாடுகள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கிவிட்டன.

சரத் வீரசேகர, விமல் வீரவன்ச, உதயன் கம்பன்பில, பேராசிரியர் தர்மரத்ன தேரர் போன்றோரால் மீண்டும் மீண்டும் இனவாத கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர். இதற்கு அரச தரப்பிலிருந்தும் அவ்வப்போது "இனவாதம் தோற்கடிக்கப்பட்டு விட்டது. இலங்கையில் இனிமேல் இனவாதம் மேலெழும்பாது" போன்ற கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இந்தக் கருத்துகளை நாம் சற்று விரிவாக உற்றுப் பார்த்தால் உண்மையில் இலங்கையில் இனவாதம் தோற்கடிக்கப்பட்டு விட்டதா என்ற கேள்வி எழுகிறது.

ஏனென்றால் மக்கள் நலனுக்கு எதிரான எந்த செயற்பாடுகளாக இருந்தாலும், அதை முழுமையாக இல்லாதொழிப்பதாக இருந்தால் எந்தப் பிரிவினைவாதமுமற்ற ஒரு சரியான-தெளிவான சித்தாந்தத்தின்பால், மக்களை கருத்தியல் ரீதியாக அணிதிரட்டி, அரசியல் மயப்படுத்தி செயற்பட்டாலே, எந்த பிரிவினைவாத செயற்பாடுகளையும், முழுமையாக தோற்கடிக்க முடியும். ஆனால் இலங்கையில் அதற்கான செயற்பாடுகள் நடந்ததா என்பது கேள்விக்குறியே.

ஜே.வி.பி என்ற மக்கள் முன்னணியினர் ஆட்சிக்கு வருவதற்கு ஆதாரமாக இருந்தது. "அரகல" என்ற போராட்டம். அந்தப் போராட்டம் மக்கள் எழுச்சிப் போராட்டமா என்றால் நிச்சயமாக இல்லை. அது தன்னெழுச்சிப் போராட்டம். பாதிக்கப்பட்ட மக்கள் தாங்களாகவே வீதியில் இறங்கிப் போராடினார்கள். அதுவும் எதைக் கேட்டு போராடினார்கள்? "காஸ் சிலிண்டரைப் பெற்றுத்தா". "பெற்றோல் எரிபொருட்களைப் பெற்றுத்தா" என்று விலைவாசி ஏற்றம் பற்றியோ.. வேறு எந்தப் பிரச்சினைகள் பற்றியோ மிகவும் மெதுவாகவே கேட்கப்பட்டது. எரிபொருட்கள் தான் ஆக முக்கியமான பிரச்சினையாக முன்னிலைப்படுத்தப்பட்டது.

எரிபொருள் பிரச்சினை ரஷ்ய, உக்ரைன் நாடுகளின் போரால் அதிக பாதிப்பை இலங்கை சந்தித்தது எனலாம்.

எரிபொருட்களுக்காக பல நாட்கள் வரிசையில் காத்திருந்த மக்களில் சிலர், இறந்து போனதாலும், கடந்த கால ஆட்சியாளர்களின் இலஞ்ச ஊழல் ஆட்சிகளாலும் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாகவே அரகல போராட்டம் எழுந்தது.

மேலும் அரகலப் போராட்டம் நடந்தவிதத்தைப் பார்த்தால் அதில் அந்நிய தலையீடுகள் அதிகமாக இருந்ததைக் காணலாம்.

காரணம்! இலங்கையில் இதுவரை நடந்த மக்கள் எழுச்சிப் போராட்டம் போலல்லாது, குடும்பமாக இணைந்து, சமையல், சாப்பாட்டு வசதிகள், குளியலறை வசதிகள், மலசல கூட வசதிகள், படுக்கை வசதிகள், மழை வெயிலுக்கு ஒதுங்குவதற்கு பாதுகாப்பான குடில் (கொட்டகை) வசதிகள் போன்ற பல வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தன. இதற்கான நிதி எங்கிருந்தோ பெறப்பட்டிருகின்றது என்பது வெளிப்படை. இதையெல்லாம் உற்றுப் பார்க்கும் போதே மேலெழுந்த கேள்வி எழுகிறது.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி பற்றி, 03.08.2025 அன்று வெளி வந்த "வலம்புரி" பத்திரிகையில் ஒரு கட்டுரை பிரசுரமாகியிருந்தது.

அதில் இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான "பாதை" என்ற தலைப்பில் பூங்கோதை இரத்தினவடிவேல் என்பவர் அந்தக் கட்டுரையை எழுதியிருந்தார். அந்தக் கட்டுரையில் அவர் தெரிவித்ததாவது "பல ஆண்டுகளாக அதிகரித்து வந்த பொதுக் கடன்; தாழ்வான வரி வருமானம்; தவறான பொருளாதார தீர்மானம்; 2019 ஆம் ஆண்டு நடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல்; கொவிட்-19 கொரோனா தொற்று.

இங்கே முக்கியமாக குறிப்பிட வேண்டியது, முப்பது வருடங்களுக்கும் மேலாக நடந்த இன விடுதலைப் போராட்டம், இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப் பெரிய தடையை ஏற்படுத்தியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இங்கே மக்கள் தன்னெழுச்சிப் போராட்டம் பற்றிக் கூறும் போது வட புலத்தில் நடந்த ஒக்ரோபர் புரட்சி பற்றியும் குறிப்பிட வேண்டும்.

அதாவது 1966 ஆம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் 21 ஆம் திகதி, வட புலத்தில், சாதீய தீர்வுண்டா உரிமைக்கு எதிரான வெகுஜனப் போராட்டம், தீண்மைக்கு எதிரான வெகுஜன இயக்கத்தினரால் முன்னெடுக்கப்பட்டது. மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசப் பேராட்டம், அச்சுவேலி தேநீர்கடை பிரவேசப் போராட்டம், பொன்னாலை குடிதண்ணீருக்கான போராட்டம் போன்ற பல போராட்டங்கள் நடாத்தப்பட்டன.

இந்தப் போராட்டத்தில், மூன்று வகை பிரிவினரான மக்கள் கலந்து கொண்டு போராடினர் என நான் நினைக்கின்றேன்.

முதலாவது வகையினர்:- முழுக்க முழுக்க கருத்தியல் ரீதியாக, அரசியல் மயப்படுத்தப்பட்ட மக்கள் குழுவினர்,

இரண்டாவது வகையினர்:- பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள், இது தங்களுக்கான விடுதலை போராட்டம் என்றுணர்ந்து, தாங்களாகவே முன்வந்து, தன்னெழுச்சியாக கலந்து கொண்டு போராடினர்.

மூன்றாவது வகையினர்:- அநீதிகளை எதிர்க்கும் மனித நேயம் கொண்டவர்கள் இவர்கள் எல்லா இனம், மதம், மொழி மற்றும் சமுதாயங்களில் இருந்தும் கலந்து கொண்ட ஒரு வர்க்கப் போராட்டமாக அந்தப் போராட்டம் நடந்தது அதனால் தான் அந்தப் போராட்டம் வெற்றியும் பெற்றது.

மேற்குறிப்பிட்ட போராட்டத்தின் அடிப்படையில் எல்லா இன, மத சமுகத்தவர்களையும் சகல ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக கருத்தியல் ரீதியாக அரசியலில் மயப்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தினால் தான் இனவாதத்தை தோற்கடிக்க முடியும். அதுமட்டுமல்ல, கூர்மையடைந்திருக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டியதும் முக்கியமானதாகும்.

தமிழ், மலையக, முஸ்லீம் மக்களை தேசிய இனங்களாக ஏற்றுக்கொண்டு சுய நிர்ணய அடிப்படையில் தீர்வு வழங்க வேண்டும். இப்படி மக்களை ஐக்கியப்படுத்தி அரவணைத்துச் செல்லும் போது தான் இனவாதத்தை மட்டுமல்ல வேறு எந்த வடிவத்தில் வரும் ஆபத்துக்களையும் எதிர்கொண்டு வெற்றி பெற முடியும். இதை விட்டு விட்டு வெறும் தேர்தல் வெற்றிகளை வைத்துக் கொண்டு இனவாதம் தோற்கடிக்கப்பட்டுவிட்டது. இனவாதிகள் இனி தலையெடுக்கமாட்டார்கள் என்று கூறுவதெல்லாம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. எங்கே ஒரு சின்ன சறுக்கல் சறுக்கினாலும், அதை பெரிதாக்கி ஆட்சியைப் பிடிக்க உயர் ஆளும் வர்க்க இனவாத சக்திகள் காத்திருக்கின்றார்கள்.

ஆகவே கடந்த கால சம்பவங்கள் என்பது திறந்த பாடப் புத்தகம் போல் விரிந்து கிடக்கின்றது. நிகழ் காலச் சம்பவங்கள் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன. இந்த இரண்டு கால சம்பவங்களையும் பக்கம் சாராது நடு நிலையாக நின்று கணித்தால் எதிர்காலத்தில் எப்படியான ஆபத்து வரும், நாம் எந்தப் பாதையில் போக வேண்டும் என்ற சரியான பாதை மக்களோடு பயணிப்பது தான் என்பது புரியும்.

**சாந்தையூரிவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : வேட்டைக்காரன்
இசை : மு.எ.மகாதேவன்
பாடல் : கண்ணதாசன்
பாடியவர் : T.M.S



உன்னை அறிந்தால்... நீ உன்னை அறிந்தால்
உலகத்தில் போராடலாம்
உயர்ந்தாலும் தாழ்ந்தாலும்
தலை வணங்காமல் நீ வாழலாம்

உன்னை அறிந்தால்... நீ உன்னை அறிந்தால்
உலகத்தில் போராடலாம்
உயர்ந்தாலும் தாழ்ந்தாலும்
தலை வணங்காமல் நீ வாழலாம்

மானம் பெரியது என்று வாழும் மனிதர்களை
மான் என்று சொல்வதில்லையா
தன்னை தானும் அறிந்து கொண்டு
ஊருக்கும் சொல்பவர்கள் தலைவர்கள்
ஆவதில்லையா

உன்னை அறிந்தால்... நீ உன்னை அறிந்தால்
உலகத்தில் போராடலாம்
உயர்ந்தாலும் தாழ்ந்தாலும்
தலை வணங்காமல் நீ வாழலாம்

பூமியில் நேராக வாழ்பவர் எல்லோரும்
சாமிக்கு நிகர் இல்லையா
பிறர் தேவை அறிந்து கொண்டு
வாரிக்கொடுப்பவர்கள்
தெய்வத்தின் பிள்ளை இல்லையா

உன்னை அறிந்தால்.... நீ உன்னை அறிந்தால்
உலகத்தில் போராடலாம்
உயர்ந்தாலும் தாழ்ந்தாலும்
தலை வணங்காமல் நீ வாழலாம்

மாபெரும் சபையினில் நீ நடந்தால் –
உனக்கு மாலைகள் விழவேண்டும் –
ஒரு மாசு குறையாத மன்னவன் இவனென்று
போற்றிப் புகழ வேண்டும்

உன்னை அறிந்தால்... நீ உன்னை அறிந்தால்
உலகத்தில் போராடலாம்
உயர்ந்தாலும் தாழ்ந்தாலும்
தலை வணங்காமல் நீ வாழலாம்

## 'காசாவின் குரல்' லாமா நாசர்

# 11 வயது பத்திரிகையாளரை கொன்ற இஸ்ரேல்!

பாலஸ்தீனத்தில் நடக்கும் பச்சைப் படுகொலைகளை, உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிய ஏராளமான பத்திரிகையாளர்களை, 'போர்' என்கிற போர்வையில் கொன்று குவிப்பதை வாடிக்கையாக வைத்திருக்கிறது இஸ்ரேல். அப்படி, பாலஸ்தீன ஊடகம் ஒன்றுக்குச் செய்தி வழங்கிக்கொண்டிருந்த 11 வயது சிறுமியையும் தற்போது கொலைசெய்திருக்கிறது இஸ்ரேல்.

இஸ்ரேலுக்கும், காசாவிலுள்ள ஹமாஸ் படைக்கும் போர் தொடங்கியது முதலே அங்கு நடக்கும் அவலங்களை உலகுக்குத் தெரியப்படுத்திய 230இற்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்களைக் கொன்றிருக்கிறது இஸ்ரேல் இராணுவம். "இஸ்ரேல் செய்யும் அட்டூழியங்கள் உலகுக்குத் தெரிந்துவிடக் கூடாது என்பதற்காக, திட்டமிட்டே செய்யப்பட்ட படுகொலைகள் இவை'' என்கிறார்கள் உலகின் முன்னணிப் பத்திரிகையாளர்கள்.

### யார் இந்த லாமா நாசர்?

பத்திரிகையாளர்கள் தொடர்ச்சியாகக் கொல்லப்படவே, நூற்றுக்கணக்கான தன்னார்வலர்கள் தாமாகவே முன்வந்து இஸ்ரேல் இராணுவத்தின் கொடூரங்கள் குறித்துக் காணொளியாகப் பதிவுசெய்து சமூக ஊடகங்களில் பதியத் தொடங்கினர். சிலரது பதிவுகளைக் கண்ட ஊடகங்கள் சில, அவர்களைச் சுயாதீனப் பத்திரிகையாளர்களாகத் தங்களது ஊடகங்களுக்குப் பயன்படுத்திக்கொண்டன. அப்படி, உயிருக்கு அஞ்சாமல் செய்திகளை வழங்கத் தொடங்கியவர்களில் ஒருவர்தான் லாமா நாசர். பாலஸ்தீனத்தில் வசித்துவந்த 11 வயது சிறுமி. தன் தாய் சாமாவின் உதவியோடு, ஆங்கில வார்த்தைகளைக் கற்றுக்கொண்டு, தனது பேச்சுத் திறமையை வளர்த்துக் கொண்டார் லாமா. காசாவின் அவலங்களை வீடியோ வாகப் பதிவுசெய்து பாலஸ்தீன் க்ரானிக் கல்ஸ்' என்ற ஊடகத்துக்கு அவற்றை அனுப்பி வந்தார். களத்திலிருந்து பத்திரிகையாளர்கள் எப்படிச் செய்திகளை வழங்குவார்களோ அதே தொனியில், சற்றும் தொய்வில்லாமல் காணொளியில் பேசுகிறார் லாமா.

### 'இனப்படுகொலையை நிறுத்துங்கள்..!'

தான் மட்டுமல்லாமல், அக்கம் பக்கத்தில் வசிக்கும் குழந்தைகள், நண்பர்களையும் தனது காணொளிகளில் பேசவைத்திருக்கிறார் லாமா. அதிலொரு காணொளியின் இறுதியில் லாமாவின் நண்பர்கள், "இனப்படுகொலையை நிறுத்துங்கள்" என்று ஒருசேர முழங்கி, காசா மக்களின் உணர்வுகளைப் பிரதிபலித்திருக்கின்றனர்.

இறுதியாக, "பாலஸ்தீன் க்ரானிக் கல்ஸ விற்கு லாமா வழங்கிய காணொளியில், "காசாவிலுள்ள குழந்தைகள், உலகின் மிகக் கடுமையான, சவால் மிகுந்த சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பேரழிவு நிறைந்த இந்த இடத்தில், சிறு சிறு கனவுகளைச் சுமந்துகொண்டு வாழ முயன்று கொண்டிருக்கின்றனர். உண்ண உணவில்லாததால், பட்டினியில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அதோடு, தொற்று நோய்களாலும் குழந்தைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். குறிப்பாக, போலியோவால் ஏராளமான குழந்தைகள் பாதிக்கப்பட்டு அவதிப்படுகின்றனர்.

இங்கிருக்கும் பிள்ளைகள், பள்ளிகளுக்குச் சென்று வகுப்பறையில் அமர்வதற்கு பதிலாக, தங்களது தந்தையின் கல்லறைகளுக்குப் பக்கத்தில் அமர்ந்துகொண்டிருக்கின்றனர். அல்லது தண்ணீருக்காக வரிசையில் நின்று வாடிக்கொண்டிருக்கின்றனர். காசாவின் குழந்தைகள், இனப்படுகொலையை நிறுத்த வேண்டும் என்றும், உலகிலுள்ள மற்ற குழந்தைகளைப்போல அமைதியாக வாழ வேண்டும் என்றும்தான் விரும்புகின்றனர்" என்று தன் மக்களுக்காகக் குரல் கொடுத்திருந்தார்.

### பெருங்கனவைக் கொன்ற இஸ்ரேல் ஏவுகணை!


எதிர்காலத்தில் தன் மகளைக் காசாவின் குரலாக்க வேண்டும் என்பதே சாமாவின் கனவு என்கிறது. அந்தக் கனவை சுக்குநூறாக்கிக் கொன்றிருக்கிறது இஸ்ரேல் இராணுவத்தின் ஏவுகணை. ஜூலை 15 ஆம் திகதி நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில், குடும்பத்தோடு லாமா கொல்லப்பட்டிருக்கிறார்.

லாமா மறைந்துவிட்டாலும், நிச்சயம் அவரது காணொளிகள் மூலம் இஸ்ரேலின் கொடூரங்கள் உலக அரங்கில் நியாயக் குரலாக என்றும் ஒலித்துக்கொண்டிருக்கும். எதிர்காலத்தில் லாமாவை முன்னுதாரணமாகக்கொண்டு பலரும் காசாவின் குரலாக ஒலிக்கக்கூடும்!




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாம்பு பற... பற...



"பாம்பு என்றால் படையும் நடுங்கும்" என்று கேள்விப்பட்டிருப்போம். சில பாம்பு இனங்கள் தண்ணீரில் நீந்துவது, காற்றில் பறப்பது என தனித்துவமான திறன்கள் பெற்றிருப்பதை பற்றிப் பலரும் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள்.

கடல் பாம்புகள் முதல் மரங்களுக்கு இடையே பறக்கும் பாம்புகள் வரை, சில பாம்பு இனங்கள் மட்டும் இவ்வாறு இயற்கையாகவே பண்புகளை கொண்டுள்ளன.

**கடல் கிரைட்**

அதிக விஷத்தன்மை கொண்ட இந்த வகை பாம்புகள் கடல் சூழலில் வாழ்கின்றன. துடுப்பு போன்ற வால்களைப் பயன்படுத்தி தண்ணீரில் எளிதாக நீந்துகின்றன. இவை பெரும்பாலும் பவளப்பாறைகளில் வாழ்கின்றன, முட்டையிடுவதற்கும் ஓய்வெடுப்பதற்கும் மட்டுமே கரையை அடைவதாக தகவல்கள் கூறுகின்றன.

**கடல் பவளப்பாம்பு**

கடல் பவளப்பாம்புகள் சிறந்த நீச்சல் திறன்களை கொண்டுள்ளன. இவை பொதுவாக பவளப்பாறைகள் மற்றும் பாறைப் பகுதிகளில் காணப்படுகின்றன. சில கடல் பவளப்பாம்பு இனங்கள் அழியும் அபாயத்தில் உள்ளன.

**காட்டன் மவுத்**

இந்த விஷமுள்ள பாம்பு, அமெரிக்காவின் தென்கிழக்கு பகுதிகளில் உள்ள சதுப்பு நிலங்கள், ஏரிகள், ஆறுகளில் காணப்படுகின்றன. இவை மேற்பரப்பில் மிதப்பதோடு மட்டுமில்லாமல், நீருக்கடியில் மூழ்கியும் வேட்டையாடுவதாக கூறப்படுகிறது.

**பறக்கும் பாம்புகள்**

தென்கிழக்கு ஆசியாவில் காணப்படும் இந்தப் பாம்புகள், தங்கள் விலா எலும்புகளைத் தட்டையாக்கி, காற்றில் அலைவு அசைவுகளை உருவாக்கி, மரங்களுக்கு இடையே பறக்கின்றன. இவை 100 மீற்றர் தூரம் வரை பறக்குமாம். இந்த பறக்கும் திறன் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் வேட்டையாடுவதற்கும், வேட்டையாடுபவர்களிடமிருந்து தப்பிப்பதற்கும் உதவுகிறது.

**பாரடைஸ் மரப்பாம்பு**

பச்சை மற்றும் கறுப்புநிற வண்ணக் கோடுகள் உள்ள இந்தப் பாம்புகள் வெப்பமண்டல காடுகளில் மரங்களுக்கு இடையே பறக்கிறது. இவை காற்றில் பறக்கும்போது காற்றியல் இயக்கங்களைப் பயன்படுத்தி, பூச்சிகள் மற்றும் சிறிய பல்லிகளை வேட்டையாடுகின்றன.

# ஆச்சி அறிவுரை



## சேமிப்புப் பழக்கம் சிறுவயதிலிருந்து வேண்டும்!

### பேராண்டி...

நவீன உலகம். விரல் நுனியிலை உலகத்தையே கொண்டுவாற AI யுகம் இது. இதுகள் இருந்து என்ன பயன். மனிசன் மனிசனா இல்லையே. மிருகத்திலும் மோசமாகவெல்லோ இருக்கிறான் மனிசன்.

இப்பத்தைய நவீன உலகத்துப் பிள்ளைகள்தான் பாவங்கள். இந்தப் பாவப்பட்ட உலகை அதுகளிட்டைக் கையளிச்சுப்போட்டெல்லோ போகப் போறம் நாங்கள். முந்தின காலங்களிலை எல்லாரிட்டையும் சேமிப்புப் பழக்கம் இருக்கும். உழைச்ச பணத்தை எதிர்காலத் தேவைக்காக சேமிச்சு வைக்கிறது பெரிய விஷயம். அதுகள் சின்ன வயசிலை இருந்து வரவேணும்.

பேராண்டி! "பிடி அரிசி" எண்டால் என்ன எண்டு உனக்குத் தெரியுமோ? ஓம், வீட்டிலை ஒவ்வொரு நாளும் சமைக்கிறதுக்கு அரிசி எடுக்கேக்குள்ள அதிலை ஒரு பிடி எடுத்து சேமிச்சு வைப்பினம். அப்பிடி சேமிச்சு வைக்கிற அரிசி பஞ்ச காலத்திலை சமையலுக்கு உதவியா இருக்கும். இது வாழ்க்கைக்கான நல்ல பாடம் பேராண்டி. இந்தப் பழக்கம் அரிசிக்கு மட்டுமில்லை எல்லாத்திலும் இருக்கவேணும். உண்டியலிலை பணம் சேர்க்கிற பிள்ளைகள் இப்ப அருகிட்டுது.

நாங்கள் சின்னப்பிள்ளையா இருக்கேக்குள்ள தகரப் பேணியிலை உண்டியல் செய்து வீட்டு மூலைக்குள்ள கிடங்குகிண்டி தாட்டுப் போட்டு, அதுக்கு மேலை சட்டி, பானையை வைச்சு மறைச்சு விடுவம். ஐயாட்டை ஐஞ்சியம், பத்துச்சதமெண்டு வாங்கி அதுக்குள்ள போட்டு வைப்பம்.

ஒரு வருசத்துக்குப் பிறகு, வருசம் – தீபாவளிக்கு அதை எடுத்து ஆச்சிட்டைக் குடுப்பம். அந்தக் காசிலை சட்டை வாங்கித் தருவினம்.

அதுகள் காலத்துக்கும் அழிக்க முடியாத பசுமையான நினைவுகள் பேராண்டி.

ஆனால் இப்ப பிள்ளைகளுக்கு காசின்ர அருமை தெரியேல்லை. காசு மரத்திலை காய்க்குது எண்டு நினைக்குதுகள்.

அண்மையிலை ஒரு கடைக்குப் போயிருந்தன். எட்டு வயதுப் பிள்ளை மிட்டை தாய் உனக்கு என்ன வேணுமெண்டாலும் எடு எண்டு சொல்லி விடுறா. பிள்ளையும் அது – இதுவெண்டு தேவையில்லாததையெல்லாம் எடுக்குது. அதைப்பார்த்து தாய் ரசிக்கிறா. எனக்கும் கெட்ட கோபம்தான் வந்துது.

பிள்ளை வளர்ப்பு ஒரு கலை.

வளருற பிள்ளையை மண் விளையாட்டிலை தெரியும் எண்டுவினம் அதே ஆக்கள்தான் "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே. அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" எண்டும் சொல்லியிருக்கினம்.

பிள்ளைகளுக்கு வாழ்க்கையைச் சொல்லிக் குடுங்கோ. அதுதான் அதுகளை வளமாக்கும். இல்லாட்டி அதுகளின்ர வாழ்க்கை அழிஞ்சு போயிடும்.

ஆச்சி வருவா...

மாவை.நா.கஜேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன அழுத்தத்தைக் குறைக்க குழந்தைகளின் சூப்பி



சீனாவில் இளைஞர்கள் மன பதற்றத்தைக் குறைக்கவும், தூக்கத்தை மேம்படுத்தவும் கைக்குழந்தைகளுக்கு கொடுக்கப்படும் பசி.்.பயர்களைப் (சூப்பி) பயன்படுத்துவது பரவிவருகிறது.

சில ஒன்லைன் வர்த்தக மையங்கள் 2000இற்கும் மேற்பட்ட பெரியவர்களுக்கான பசி.்.பயர்களை விற்றுள்ளதாகத் தெரிவிக்கின்றன. குழந்தைகளுக்கான சூப்பிகளைவிட சற்றுப் பெரியதாக இருக்கும் இது 100 முதல் 500 யுவான் விலைக்கு விற்கப்படுகிறது. இந்திய மதிப்பில், 120 ரூபாய் முதல் 6000 ரூபாய் வரை பல கடைகள் பெரியவர்களுக்கான சூப்பிகள் மன அழுத்தத்தைக் குறைத்து தூக்கம் வர உதவுவதாக விற்பனை செய்தாலும் மருத்துவர்களும், நெட்டிசன்களும் இது குறித்து கவலைகளை எழுப்பியுள்ளனர்.

இந்த சூப்பியைப் பயன்படுத்துபவர்கள் இது புகைப் பழக்கத்தைக் கட்டுப்படுத்தவும், சரியாக சுவாசிக்கவும் உதவுவதாகக் கூறியிருக்கின்றனர். புகைப்பழக்கத்தை நிறுத்துகையில் ஏற்படும் பதற்றத்தைத் தணிப்பதற்கான உளவியல் ஆறுதலாக இருப்பதாகக் கூறியுள்ளனர்.

வேலைகளில் பதற்றமாக உணரும்போது அதைத் தணிப்பதாக இவற்றைப் பயன்படுத்துவதாகக் கூறியுள்ளனர். இது குழந்தைப் பருவத்தில் இருந்த பாதுகாப்புணர்வைத் தருவதாகக் கூறுகின்றனர்.

ஆனால், அதிகமாக இதனைப் பயன்படுத்துவது, பல் வரிசையில் மாற்றத்தை ஏற்படுத்தலாம், மெல்லும்போது வலியை உண்டாக்கலாம், வாயைத் திறக்கவே கஷ்டப்படும் சூழலை உருவாக்கலாம் என மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

உங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டுமே தவிர, உங்களைக் குழந்தை போல பாவித்து அதிலிருந்து தப்பிக்க நினைக்கக்கூடாது என உளவியலாளர்கள் ஆலோசனை வழங்குகின்றனர்.

# அடுக்களைப் பக்கம்



- காம்பு நீளமாக, திக்காக உள்ள வாழைக்காய், சுரைக்காய் போன்றவற்றைப் பாதி நறுக்கிவிட்டு மீதியை வைக்கும்போது நறுக்கிய பகுதி நிறம் மாறி நீர் கசிய ஆரம்பிக்கும். இதைத் தவிர்க்க மீதியுள்ள பகுதியை லேசாக எண்ணெய் தடவி அலுமினியம் .்.பாயில் எடுத்துச் சுற்றி ரபர்பாண்ட் போட்டு .்.ப்ரிட்ஜில் வைக்கவும். காம்புப் பகுதியையும் அலுமினியம் .்.பாயில் சுற்றி வைத்தால், அழுகாமல் நாம் வெட்டிவிட்டு வைத்த மீதிக்காய் புத்தம் புதிதாக இருக்கும்.
- மாங்காயைத் துருவி பொரித்த குழம்பு மற்றும் கூட்டு வகைகளில் கடைசியாகப் போட்டு ஒரு கொதி வந்ததும் இறக்கினால், சுவை கூடும் (மாங்காய் சீசனில் மாங்காய்கள் வாங்கி, துருவி, வெயிலில் காயவைத்து, பொடித்து, ஆம்சூர் பொடியாக்கி வைத்துக்கொண்டு இப்படி உபயோகித்துக் கொள்ளலாம்).

# வாஸ்துப்படி படுக்கை அறையும் படிக்கும் அறையும்




வாஸ்து சாஸ்திர நூல்களில், வீட்டின் தென் மேற்குப் பகுதி படிப்பதற்கு உரியதாகக் கூறப்படுகிறது. ஜோதிட விதிப்படி புதன் கிரகத்தை "வித்யாகாரகன்" என்று சொல்வார்கள். ஆக, படிக்கும் அறையானது புதனுக்கு உரிய திசையில் அமைவது விசேஷம். அல்லது, ஞானகாரகனாகிய குருவுக்கு உரிய திசையில் அமைக்கலாம். புதனுக்கு உரிய திசை வடக்கு. குருவுக்கு உரியது வடகிழக்கு. ஆகவே, இந்தத் திசைகளை நோக்கியபடி படிப்பதால் நல்ல பலன் கிடைக்கும்.

மனிதனுக்குத் தூக்கமும் மிக அவசியம். சராசரி மனிதர் ஒருவர் நாளின் 24 மணி நேரத்தில், 8 மணி நேரம் அலுவல்களிலும், 8 மணி நேரம் வெளியிடங்களிலும், 8 மணி நேரம் வீட்டிலும் இருப்பதற்கான சூழ்நிலை உள்ளது.

மனிதர்கள் ஒவ்வொருவரும் புத்துணர்ச்சியுடனும், சுறுசுறுப்பாகவும், தெளிவான சிந்தனைகளுடனும் செயற்பட நல்ல நிம்மதியான தூக்கம் அவசியம். அது கைகூட தென்மேற்கில் படுக்கை அமைக்கலாம். மேலும், படுக்கை அறையில் கிழக்கு, மேற்கு அல்லது தெற்கில் தலைபாகம் இருக்கப் படுப்பது சிறப்பாகும்.

# பறவைக்கூடு சூப்



உலகெங்கிலும் உள்ள உணவுப்பழக்கவழக்கங்கள் நம்மை ஆச்சரியப்படுத்தத் தவறுவதில்லை. சில உணவுகள் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் பழைமையானதாக இருக்கும், சில உணவுகள் விலை உயர்ந்ததாக இருக்கும்.


அப்படி இங்கு பறவையின் கூடு நிறைந்த சூப் உலகின் மிக விலை உயர்ந்ததாகக் காணப்படுகிறது. அது குறித்து இந்தப் பதிவில் தெரிந்துகொள்ளலாம். சீனா, தைவான், ஹாங்காங் மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் காணப்படும் ஒரு சிறிய பறவையான ஸ்விஃப்ட்லெட்டின் கூடுகளிலிருந்து தயாரிக்கப்படும் இந்தப் பறவைக்கூடு சூப் சீன மக்களிடையே மிகவும் பிரபலம்.

இந்தச் சூப் பல்வேறு நன்மைகளை வழங்குவதாக சீன மக்கள் நம்புகின்றனர். இந்தச் சூப்பின் ஆரோக்கிய நன்மைகள் குறித்து போதுமான அறிவியல் சான்றுகள் இல்லை என்றாலும், இது சரும பாதுகாப்பு மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் எனவும் வயதான தோற்றத்தை கட்டுப்படுத்த உதவும் எனவும் சீன பாரம்பரிய மருத்துவ குறிப்புகளில் இருப்பதாக கூறப்படுகிறது.

அதுமட்டுமில்லாமல் ஆஸ்துமா அல்லது நாட்பட்ட இருமல் போன்ற சுவாசக் கோளாறுகளைப் போக்கவும், பசியை அதிகரிக்கவும், செரிமானத்தை மேம்படுத்தவும் உதவுவதாக சீன மக்கள் நம்புகின்றனர். இதனைப் பருக சீன மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். சீன மக்கள் மட்டுமல்லாது தற்போது இணைய பயனர்களின் கவனத்தையும் பெற்றுள்ளது. சிவப்புக் கூடுகள் என்று அழைக்கப்படும் மிகவும் அரிதான பறவையின் கூடு ஒரு கிலோ $10,000 (ரூ. 8 லட்சம்) மதிப்புடையது. வெள்ளை மற்றும் கறுப்புக் கூடுகளின் விலை ஒரு கிலோ $5,000 முதல் $6,000 (ரூ. 4 லட்சம் முதல் 5 லட்சம்) வரை இருக்கும் என்று கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை அழிவைக் கணிக்கும் சக்தி விலங்குகளிடம் உண்டு





"இமாச்சல பிரதேசத்தில் கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக நடந்துவரும் நிலச்சரிவுகள், மாநிலத்தையே புரட்டிப்போட்டு உயிர்களைக் காவு வாங்கி வருகின்றன. இதற்கிடையே, பேரிடர் நடக்கவிருப்பதை முன்கூட்டியே அறிந்த வளர்ப்பு நாய் ஒன்று, தொடர்ந்து குரைத்து தன் உரிமையாளரை எச்சரித்ததன் மூலம், மொத்தம் 67 உயிர்களைக் காப்பாற்றிய ஆச்சரிய நிகழ்வு அங்கு நடந்தேறியது.

விலங்குகளால் எப்படி எச்சரிக்க முடிந்தது. பழங்குடிகளால் எப்படி தப்பிக்க முடிந்தது? என்கின்ற கேள்விகளுக்கு... அது இயற்கையே அளித்த கொடை.

மனிதர்கள் உட்பட அனைத்து உயிர்களுக்கும் கொடுக்கப்பட்ட கொடைதான். ஆனால், நாம் அதை கிட்டதட்ட இழந்துவிட்டோம் என்கிறார்கள், சூழல் ஆர்வலர்கள்.

**அந்தமான் சுனாமியும், சென்டினலிஸ் பழங்குடிகளும்!**

இந்தியக் கடலோர காவற்படையில் சீனியர் கமாண்டராக பணிபுரிந்து ஓய்வுபெற்றவர் மதுரையைச் சேர்ந்த சோமு. சுனாமி காலத்தில் அந்தமானில் பணியாற்றிய அவர் அதுகுறித்த தன் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார்.

2004ஆம் ஆண்டு சுனாமி ஏற்பட்ட போது. அந்தமானில் ஒரு கப்பலில் கப்டனாக இருந்தேன். அந்தமான் தீவுகளில் வசிக்கும் பழங்குடி மக்களுக்கு சுனாமியால் ஏதாவது ஆபத்து நேர்ந்துள்ளதா என்பது குறித்து விசாரிக்க, அரசு உத்தரவிட்டிருந்தது.

அந்தமான் - நிகோபார் தீவுகளில் பல பழங்குடி இன மனிதர்கள் வாழ்கின்றனர். அவற்றில், சென்டினலிஸ் (Sentinelese) இன பழங்குடி மக்கள் என்ன ஆனார்கள் என்ற அச்சம்தான் எங்களுக்கு மேலோங்கி இருந்தது. சென்டினலிஸ் பழங்குடி மக்கள் அரசால் அணுகமுடியாத வகையில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களைப் பார்க்கவோ, தொந்தரவு செய்யவோ யாருக்கும் அனுமதி கிடையாது.

ஆனால், சுனாமி அலையால் ஏற்பட்ட பேரச்சம் அவர்களைக் கண்டுவர வேண்டிய கட்டாயத்தை உருவாக்கியது. அவர்களை தரை வழியாக யாராலும் அணுக முடியாது. அதனால், இந்திய கடலோர காவற்படை சார்பாக ஒரு ஹெலிகாப்டர் மூலம் ஏர் போட்டோகிராபர் ஒருவர், இரண்டு விமானிகளோடு நானும் சேர்ந்து சென்டினலிஸ் பழங்குடி மக்கள் வசிக்கும் தீவின் மேல் வலம் வந்தோம்.

**அத்தனை உயிர்களையும் காப்பாற்றிய அந்த ஒரு விடயம்!**

அந்தத் தீவில் இருந்த விலங்குகள் தீவின் மேடான பகுதிகளுக்கு இடம்பெயர்ந்திருந்தன. கூடவே, சென்டினலிஸ் தீவில் வாழும் பழங்குடி மக்களும் மேடான இடத்தில் குழுமி இருந்தார்கள்.

ஏதோ நடக்கப் போகிறது என்ற நுண்ணுணர்வு அங்கிருந்த விலங்குகளையும் மக்களையும் முன்கூட்டியே மேடான பகுதிக்குச் செல்ல உந்தித் தள்ளியுள்ளது.

அவர்களுக்குள் இருந்த இயற்கையான நுண்ணுணர்வு அங்கிருந்த அத்தனை உயிர்களையும் காப்பாற்றியிருக்கிறது. விலங்குகளிலும் மனிதர்களிலும் ஓர் உயிரிழப்புகூட நிகழவில்லை.

இதைப் பதிவு செய்ய புகைப்படம் எடுக்க, நாங்கள் உயரத்தைக் குறைத்து தாழ்வாகப் பறக்க ஆரம்பித்தோம். எங்களின் ஹெலிகாப்டர் மீது அவர்கள் ஈட்டிகளை எறிந்தார்கள். அதை போட்டோகிராபர் புகைப்படம் எடுத்து வெளியிட்டார். அது அந்த சமயத்தில் உலகம் முழுவதும் பேசப்பட்டது.

**நீர்ப்பூச்சிகளும், தவளைகளும், எறும்புகளும் தரும் சிக்னல்கள்!**

காடுகளில், பழங்குடி மக்கள் காட்டாற்றை ஒட்டிய பகுதிகளிலேயே அதிகம் வாழ்கிறார்கள். அதில் அடிக்கடி பெரும் வெள்ளம் ஏற்படும். அதை உணரும் நீர்ப்பூச்சிகள் மற்றும் தவளைகள், இரண்டு நாட்களுக்கு முன்பே ஆற்றை விட்டு வெளியேறிவிடும். அவை அப்படி வெளியேறினால், ஆற்றில் வெள்ளம் வரப்போகிறது என்று பழங்குடியின மக்கள் அறிந்து கொள்கிறார்கள்.

**இரவெல்லாம் கத்திய வௌவால்கள்... விடிந்ததும் வந்த பேரிடர்!**

நாகப்பட்டினத்தில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட வௌவால்கள், ஒரே இடத்தில் வாழ்ந்து கொண்டிருந்தன. மாலை 6 மணிக்கு வெளியே இரை தேடிச் சென்றுவிட்டு, அடுத்த நாள் காலை 6 மணிக்கு மீண்டும் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்துவிடும்.

ஆனால், ஒருநாள் இரவு மட்டும் மாலை 6 மணிக்குச் சென்றவை இரவு 11 மணிக்குத் திரும்பிவிட்டன. திரும்பிய வௌவால்கள் அனைத்தும் மிகுந்த ஒலி எழுப்பிக் கத்தியுள்ளன. தங்கள் தூக்கத்தை தொந்தரவு செய்ததால், "ஏன்தான் இப்படி கத்துதோ..." என்று மக்கள் சலித்திருக்கிறார்கள்.

அடுத்தநாள் அதிகாலையில் மிகப்பெரிய சுனாமி வந்து நாகப்பட்டினம் மாவட்டத்தைத் தாக்கியது. "அதுவே 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி" என்றவர்.

இயற்கையின் ஒவ்வோர் அசைவையும் நன்றாக உணர்ந்து அதை அறியும் திறன், பிற உயிரினங்களுக்கு மரபணுவிலேயே உள்ளது.

இதுவரை பூமியில் தோன்றிய உயிர்களில் மனிதன்தான் புதிய குழந்தை.

எனவே, இயற்கையின் முன்னத்தி உயிர்களான மற்ற விலங்குகளை கவனித்தாலே நம்மை தற்காத்துக் கொள்ள முடியும்.

நம் முன்னோர்களிடம் இருந்த இயற்கையை உணரும் குணாதிசயம் நம்மிடம் இல்லாமல் போய் விட்டது. இதற்குக் காரணம் உற்பத்தி பண்பாடு மற்றும் நவீனமயமாக்கல்.

"நம் முன்னோர்கள் நமக்குக் கொடுத்த மரபு சார்ந்த அறிவுகளை நாம் அழித்துக்கொண்டே வருகிறோம்" என்றார் வருத்தத்துடன்.

## தெளிவே என் சிந்தனையுள்... 23

ஒரு கிராமத்திற்கு துறவி ஒருவர் வந்திருந்தார். அவரைப் பார்க்க ஊர்மக்கள் பக்தி பூர்வமாகச் சென்று கொண்டிருந்தனர்.

கடவுள் நம்பிக்கையில்லாத, பணம் படைத்த ஒருவன் "சோம்பேறிகள்தான் துறவிகளாவார்கள்" என அவர்களிடம் வெளிப்படையாகப் பேசியதுடன்.

அவரின் இருப்பிடத்திற்குச் சென்று அவரை அவமானப்படுத்த எண்ணினான்.

ஆச்சிரமதிற்குச் சென்று சுவாமிகளைப் பார்த்து "ஓ... நீங்கள்தான் கடவுளுக்காக உங்கள் வாழ்க்கையை இழந்தவரா?" எனக் கேட்டான்.

தன்னை அவமதிப்பதை உணர்ந்த துறவி சிரித்துக்கொண்டே.

"என்னைவிட நீங்களே மிகப்பெரிய துறவி" என்றார். அவருக்கு எதுவும் புரியவில்லை. சுவாமியைப் பார்த்தார்.

"அட, நான் கடவுளுக்குகாக என் வாழ்வை இழந்தவன். ஆனால் நீங்களோ சுகபோக வாழ்க்கைக்காக கடவுளையே இழந்தவராயிற்றே" என்றார்.

சுவாமிகளின் வார்த்தை அவரைக் கூனிக் குறுக வைத்தது.

தன் பிழையை உணர்ந்து, சுவாமிகளை வணங்கிச் சென்றார்.

**அன்பானவர்களே!**

எம்மில் பலர் இவ்வாறானவர்களே அடுத்தவர்களை எப்படிக் கீழ் நிலைப்படுத்துவது என்பதே அவர்களின் மூளைக்குள் ஓடிக்கொண்டிருக்கும்.

அவர்கள் மேற்குறித்த துறவி போன்றவர்களிடம் சிக்கும் போதே ஞானம் பிறக்கிறது.



குருஜி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# காலம் பல கண்ட யாழ். கோட்டை

66

செங்கை ஆழியான்

பலர் காயமடைந்தனர் இதனால் சினம்கொண்ட இராணுவத்தினர் தகாத வார்த்தைகளால் பலாலி இராணுவத்தினரையும் கோட்டை முகாம் உயர் இராணுவ அதிகாரிகளையும் பேசினர்.

முற்றுகையின் இறுதிக் காலங்களில் கோட்டை முகாமில் துப்பாக்கி ரவைகள் ஓரளவு இருந்தபோதிலும் ஷெல் குண்டுகள் தீர்ந் துவிட்டன. 5 அல்லது 6 ஷெல்களை மட்டுமே அவசரதேவைக்காக வைத்திருந்தனர். போதிய உணவின்மையால் சில வேளைகளில் 4 அல்லது 5 நாட்கள் உணவு எதுவுமின்றி இராணுவத்தினரும் பொலிஸாரும் இருந்தனர். உள்ளே விழும் உணவுப் பொதிகளில் உள்ள விசேட உணவு வகைகள் உயர் இராணுவ அதிகாரிகளால் எடுக்கப்பட்டன.

16.ஜூன் 1990 கோட்டை முற்றுகை தொடர்ந்தது கோட்டையின் ஐந்து கொத்தளங்களிலும் பாரிய சுடு படைக்கலங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. கோட்டை மதிற் சுவரில் மண்மூடைகள் நெருக்கமாக இடைவெளிகளின்றி அடுக்கி இறுக்கப்பட்டிருந் தன. மண்மூடைகளை அரணாகக் கொண்டு நூற்றுக்கணக்கான துப்பாக்கி சுடும் தளங்கள் அமைந்திருந்தன.

கோட்டையின் தென்பக்கமான கடற்கரை வீதியைத் தவிர ஏனைய மூன்று பக்கங்களிலும் விடுதலைப் புலிகளின் "காவலரண்கள் பலமாக அமைக்கப்பட்டிருந்தன.

பண்ணைச் சந்தி, தொலைத் தொடர்பு நிலையம், கொட்டடி இடுகாடு, பெரியதபாற்கந்தோர். வீரசிங்கம் மண்டபம். திறந்தவெளி அரங்கு, பொது நூல் நிலையம், விளையாட்டரங்கு, பொலிஸ் நிலையம் ஆகிய ஒன்பது காவலரண்களில் புலிகள் நிலை கொண்டிருந்தனர். அத்தோடு கோட்டை முற்றுகையைப் பலப்படுத்துவதற்காக மண்டைதீவிலும் விடுதலைப்புலிகளின் படையணி ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. கோட்டைக்குள்ளிருந்து இராணுவம் வெளிவராது காத்து நின்ற நிலைப்பாட்டிலிருந்து. கோட்டையைக் கைப்பற்றும் முதலாவது முயற்சி 16. ஜூன் 1990 அன்று நள்ளிரவு 12 மணிக்கு நிகழ்ந்தது. சக்கை நிரப்பப்பட்ட (வெடி மருந்து) லொறி ஒன்று கடற்கரைப்பக்கக் கோட்டை மதிலோடு மோதி யாழ்ப்பாண நகரையே அந்த வெடிச்சத்தம் உலுக்கியெழுப்பியது.

அதனைத் தொடர்ந்து போராளிகள் கோட்டையைக் கைப்பற்ற விரைந்து முன்னேறினர். மண்மூடைகள் நிரப்பப்பட்ட வாகனங்களின் துணையுடன் கோட்டை மதிலை வெற்றி கொள்ள முனைந்தனர். முயற்சி வெற்றி பெறவில்லை.(தொடரும்...)

# இனிப்பும் கசப்பும்

இரண்டாம்பாகம்



காலத்தின் பதிவு 161

## கடற்புறா

அதுவும் அபாயம் எதிர் நோக்கியிருக்கும் இந்த நிலையில் என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான் கண்டியத்தேவன்.

கண்டியத் தேவனுக்குக் கசப்பாயிருந்த அந்த உத்தரவு. இனிப்பாயிருந்தது பல வர்மனுக்கு. அவனுக்கு மேலும் கரும்பாயிருக்கும் வார்த்தைகளைச் சொன்னான் இளையபல்லவ தேவரே! வேறு எந்த மரக்கலம் துறைமுகத்தில் நுழைந்தாலும் நீங்கள் தடைசெய்ய வேண்டாம்.

தடை செய்ய நமக்கு என்ன உரிமையிருக்கிறது? தடை செய்ய வேண்டியவர் இவர்!" என்று பலவர்மனைக் காட்டி விட்டுக் கோட்டையை நோக்கி நடக்கத் துவங்கினான் இளைய பல்லவன்.

அவன் போகும் திக்கைச் சில விநாடிகள் பார்த்து விட்டுக் கடல்புறாவையும் நோக்கிவிட்டு மனத்திலிருந்து இறங்கிய சுமையுடன் மாளிகை அறைக்குத் திரும்பி ஆசனத்தில் பொத்தென்று விழுந்தான் பலவர்மன். அப்பொழுது இரவு மூன்று தீபங்கள் எரிந்துகொண்டிருந்தன. தப்பினேன் இன்று. நல்ல வேளை இளைய பல்லவன் முட்டாள் தனமாக உத்தரவை இட்டான்.

இல்லையேல் நாளை இரவு வரவேண்டிய இடும்பன் எப்படி வருவான்? அந்த அசுரப் பறவையை யார் தாண்டிவர முடியும்? அப்பப்பா! சோழ நாட்டு மரக்கல வித்தையில்தான் எத்தனை மர்மங்கள்! இப்பொழுது புரிகிறது. ஏன் சோழர்களுக்குக் கடாரம் பணிந்ததென்று தனக்குள்ளேயே பலமுறை சொல்லிக்கொண்டான்.

அப்படிச் சொல்லிக்கொண்டே அந்த நினைப்பிலேயே கண்களை மூடினான். மூடியவன் தூக்கத்திலும் பேசினான். உத்தரவு நல்லது கண்டியத்தேவனுக்குக் கசப்பு எனக்கு இனிப்பு என்று முணுமுணுத்தான்.

அப்படி முணமுணுத்தவன் யாரோ தன்னை உலுக்குவதை உணர்ந்து கண் விழித்தான். அவன் கண்களுக்கு எதிரே மஞ்சளழகி நின்றிருந்தாள். அவள் நிலையைக் கண்டு பலவர்மன் அதிர்ச்சி அடைந்தான்.

உறங்கிக் கிடந்த தன்னைத் தொட்டு உலுக்கி எழுப்பிய மஞ்சளழகி நிலை கண்டு பலவர்மன் பேரதிர்ச்சி அடைந்தான் என்றால் அதற்கு காரணம் இருக்கத் தான் செய்யும்.

முகத்தில் குருவேர்வை துளிர்த்துக் கிடக்க, அடர்ந்த கருங்கூந்தல் சற்று விரிந்து அலைந்து கிடக்க ஆடையும் சீர்கெட்டுக் கிடக்க பெரும்மூச்சு வாங்க நின்ற தன் வளர்ப்பு மகளைக் கண்ட பலவர்மன் என்னம்மா? என்ன நேர்ந்து விட்டது உனக்கு? ஏன் இந்த அலங் கோலம்? என்று வினவினான்.

படைத்தலைவரைக் கேளுங்கள். முதலில் ஒரு அறையில் அடைத்து வையுங்கள் என்று பெரும் மூச்சு வாங்க பேச்சில் சீற்றம் மிதமிஞ்சி தொனிக்க சொன்னாள் மஞ்சளகி.

யார். இளையபல்லவனையா என்று கேட்டுக் கொண்டே உறக்கத்தின் உச்சத்தை உதறிவிட்டு எழுந்து மகளை அணுகிக் கேட்டான் பலவர்மன். ஆம் என்றாள் மஞ்ச ஏழகி பெருமூச்சுக்கிடையே.

ஏன் என்ன செய்தான் அவன் என்று கவலையுடன் கேட்டான் பலவர்மன். சற்று முன்பு என் அறைக்கு வந்தார் என்று தயங்கினாள். மஞ்ளழகி சொல்லம்மா பலவர்மன் குரலில் ஆதரவும் நன்கு உதித்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா



தன் படத்திற்கு மூன்று தேசிய விருதுகள் கிடைத்த மகிழ்ச்சியில் இருக்கிறார் "பார்க்கிங்" இயக்குநர் ராம்குமார் பாலகிருஷ்ணன். அடுத்ததாக, சிம்புவை வைத்து இவர் ஒரு படத்தை இயக்குவதற்கான முயற்சி நடந்தது. ஆனால், அதைப் பற்றிய பேச்சே இல்லாமல் இருக்கிறதே என்று ராம்குமாரிடம் கேட்டால், "சிம்புவின் படம் நிச்சயம் நடக்கும். கல்லூரியைப் பின்னணியாகக் கொண்ட கதை. அசத்தலான கருத்தோடு வருகிறோம். ஸ்கிரிப்ட் வேலைகளில் மும்முரமாக இருக்கிறேன்" என்று தெம்பாகச் சொல்கிறார்.



தனது கனவுப்படமான "மகாபாரதம்" படத்தின் ஆயத்தப் பணிகளை ஆரம்பித்துவிட்டார் அமிர்கான். அதற்கான ஏற்பாடுகள் மற்றும் பட்ஜெட் பற்றியெல்லாம், "கூலி" படப்பிடிப்பில் கலந்துகொண்ட போது ரஜினி, நாகார்ஜூனா, சத்யராஜ் போன்றவர்களிடம் அமிர்கான் பகிர்ந்திருக்கிறார். மும்பையில் பிரமாண்ட செட் போடப்பட்டு அடுத்த ஆண்டு படப்பிடிப்பு தொடங்க இருக்கிறதாம்.



தன்னுடைய நடிப்பில் வெற்றியைக் குவித்த "ராட்சசன்", "கட்டா குஸ்தி" படங்களின் இரண்டாம் பாகங்களைக் கொண்டுவருவதில் தீவிரமாக இருக்கிறார் விஷ்ணு விஷால். இப்போது கைவசம் இருக்கும் படங்களை முடித்ததும், ஒன்றன்பின் ஒன்றாக பார்ட் டூ வேலைகள் ஆரம்பமாகுமாம்!




துலகர் சல்மான், மலையாளப் படங்களைவிடவும் பிறமொழிப் படங்களில் கவனம் செலுத்திவருகிறார். அவரது நடிப்பில் உருவாகிவரும் "காந்தா" படம், அந்தக்காலத்து "சூப்பர் ஸ்டார்" தியாகராஜ பாகவதர் தொடர்பான கதை என்ற பேச்சு இருக்கிறது. மலையாளத்தில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கும் 'I'm Game' படத்தின் படப்பிடிப்பை முடித்திருக்கும் துல்கர், அடுத்தபடியாக தமிழில் மணிரத்னம் படத்தில் நடிக்கக்கூடும் என்கிறார்கள்.



யூடியூபர்கள் கோபி, சுதாகர் கதை நாயகர்களாக அறிமுகமாகும் படம் "ஓ காட் பியூட்டி ஃபுல்". இதன் படப்பிடிப்பு சமீபத்தில் நிறைவடைந்திருக்கிறது. நடுத்தர குடும்பத்தின் வாழ்க்கையில் அன்றாடம் நடக்கும் நிகழ்வுகளை வைத்துக் கதை பின்னப்பட்டுள்ளதாம். "உண்மைதான் என்றும் நிலையானது. வாய்மையே எப்போதும் வெல்லும்" என்பதுதான் படத்தின் மையக்கருத்தாம்.

# கூலி திரை விமர்சனம்



இயக்குநர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில் உருவாகி வெளிவந்துள்ள திரைப்படம் கூலி. இப்படத்தில் நாகர்ஜூனா, சௌபின் சாஹிர், உபேந்திரா, அமீர்கான், ஸ்ருதி ஹாசன், சத்யராஜ் எனப் பல நட்சத்திரங்கள் நடித்துள்ளனர். சன் பிக்சர்ஸ் இப்படத்தை தயாரித்துள்ளனர். மேலும் ராக் ஸ்டார் அனிருத் இசையமைத்துள்ளார்.
ரசிகர்கள் இப்படத்தின் மீது அளவுகடந்த எதிர்பார்ப்பை வைத்திருந்தனர். இந்த நிலையில், பெரிதும் எதிர்பார்ப்புடன் வெளியாகியுள்ள கூலி திரைப்படம் எப்படி இருக்கிறது என்று இந்த விமர்சனத்தில் பார்க்கலாம் வாருங்கள்.

## கதைக்களம்

ஹார்பரில் மிகப்பெரிய சாம்ராஜ்யத்தை வைத்து நடத்தி வருகிறார் கிங்பின் நாகர்ஜூனா. இன்டர்நேஷனல் லெவல் டீலிங், கொலை, கொள்ளை என அனைத்தையும் செய்து வருகிறார்.
மறுபக்கம் தேவா மான்சன் வைத்து நடத்திவரும் ரஜினிகாந்த், அவருடைய வாழ்க்கையில் 30 வருடங்களுக்கு முன் மிகப்பெரிய சம்பவம் ஒன்று நடந்துள்ளது. இதனால் அதிலிருந்து தள்ளி வாழ்ந்து வருகிறார்.

இந்தச் சமயத்தில் ரஜினியின் நெருங்கிய நண்பரான சத்யராஜ் மரணமடைகிறார். இவருடைய மரணம் இயற்கை ஆனது என அனைவரும் நம்பிக்கொண்டு இருக்கும் நிலையில், அவர் கொலை செய்யப்பட்டு இருக்கிறார் என்பதை ரஜினிகாந்த் கண்டுபிடிக்கிறார். இதற்கு யார் காரணம் அதை கண்டுபிடிப்பேன் என சத்யராஜ் மகள் ஸ்ருதி ஹாசனிடம் கூறிவிட்டு, அதற்காக வேலைகளை தொடங்குகிறார். சத்யராஜ் கிங்பின் நாகர்ஜூனாவிற்காக வேலை பார்த்து வந்துள்ளார்.

அந்தச் சமயத்தில்தான் அவருடைய மரணம் நிகழ்ந்துள்ளது. இதனால் நாகர்ஜூனாவின் இடத்திற்கு செல்லும் ரஜினிகாந்துக்கு என்ன கிடைத்தது? சத்யராஜின் மரணத்திற்கு என்ன காரணம்? உண்மையாகவே ரஜினிகாந்த் யார்? என்பதுதான் படத்தில் மீதிப் படம்.

## படத்தை பற்றிய அலசல்

ரஜினிகாந்த் தனது வழக்கமான ஸ்டைலுடன் மாஸாக நடித்துள்ளார். அதில் அவர் எந்த குறையும் வைக்கவில்லை. அதேபோல் வில்லன் நாகர்ஜூனா தனக்கு கொடுத்த கதாபாத்திரத்தை சிறப்பாக செய்துள்ளார்.
இவர்களைவிட படத்தில் மிரட்டலான நடிப்பை வெளிப்படுத்தியவர் என்றால் அது, நடிகர் சௌபின் சாஹிர்தான். முதல் காட்சியில் இருந்து தன்னுடைய ஒவ்வொரு ஷாட்டிலும் நடிப்பால் பட்டைய கிளப்பியுள்ளார் என்றுதான் சொல்ல வேண்டும். அவரை போலவே ஸ்ருதி ஹாசன் மற்றும் ரச்சித்தா ராம் ஆகியோர் தங்களது ரோலில் தனித்து நிற்கிறார்கள்.

இவர்களை தவிர்த்து படத்தில் வந்த அனைத்து கதாபாத்திரத்திலும் நம்முடன் கொஞ்சம்கூட கனெக்ட் ஆகவில்லை. சத்யராஜ், உபேந்திரா, அமீர்கான் என சிறந்த நடிகர்களை சுமாரான கதாபாத்திரத்திற்கு பயன்படுத்தியுள்ளனர். அமீர்கான்கூட கேமியோ என விட்டுவிடலாம். ஆனால், சத்யராஜ் மற்றும் உபேந்திராவின் கதாபாத்திரங்களுக்கு இன்னும் ஸ்கோப் கொடுத்திருக்கலாம் என தோன்றுகிறது.

வில்லன் கதாபாத்திரத்தை நாகர்ஜூனா சிறப்பாக செய்திருந்தாலும், அந்தக் கதாபாத்திரத்தில் வலு இல்லை. எப்போது ஒரு வில்லன் கதாபாத்திரம் மிரட்டலாக இருக்கிறதோ, அப்போதுதான் ஹீரோவும் மாஸாக தெரிவார். அது கூலி படத்தில் மிஸ் ஆனது, படத்திற்கே மிகப்பெரிய மைனஸ் பாயிண்டாக மாறியுள்ளது.

மாநகரம், கைதி, மாஸ்டர், விக்ரம் என திரைக்கதையில் எப்போது தரமான சம்பவம் செய்யும் லோகேஷ், கூலி படத்தில் நமக்கு ஏமாற்றத்தை தந்துள்ளார். அதேபோல் படத்தின் நீளம் சற்று சலிப்பை ஏற்படுத்துகிறது. சில இடங்களில் குழப்பமாகவும் இருக்கிறது. லோகேஷ் எமோஷனல் கனெக்ட் செய்து படத்துடன் நம்மை பயணிக்க செய்வார். ஆனால், கூலி படத்தில் எமோஷனல் கனெக்ட் இல்லை.

சண்டை காட்சிகள் சொதப்பல். லாஜிக்கே இல்லை. ரஜினிகாந்த் ஒரே இடத்தில் நிற்கிறார், அனைத்து ரவுடிகளும் அவரிடம் சென்று அடி வாங்கி கொள்கிறார்கள். பூஜா ஹெக்டேவின் மோனிகா பாடல் கலர்புல்லாக இருந்தாலும், அது தேவையா என்கிற கேள்வியும் எழுகிறது.

பிளாஷ்பேக் காட்சிகள், 80ஸ் இற்க்கு நம்மை கூட்டிச் சென்ற விதம், அங்கு ரஜினிகாந்திற்கு வைத்திருந்த மாஸ் Movements சிறப்பாக இருந்தது. மேலும் அனிருத்தின் பாடல்களும், பின்னணி இசையும் ஓகே. ஒளிப்பதிவு மற்றும் எடிட்டிங் படத்திற்கு பலம் சேர்க்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘நித்திலம் தொகுத்து வழங்கும்’

# சுகமான விடியல்

458

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## தாய்ப்பாலூட்டி தாய்சேய் ஆரோக்கியம் வளர்க்க...

உலகளாவிய ரீதியில், பிறந்த குழந்தைக்கு முதல் ஆறு மாதங்கள் வரை தனித் தாய்ப்பால் மாத்திரமே வழங்கப்பட வேண்டும் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதி மற்றும் சட்டம் ஆகும். ஆனால் தற்போது, பலர் குழந்தைக்கு தாய்ப் பாலூட்டுவதை தவிர்த்து, புட்டிப்பால் எனப்படும் இலகுவாக கிடைக்கின்ற பால் வகைகளை கொடுக்கின்றனர். முதல் ஆறு மாதங்களுக்கு, குழந்தைக்கு தனித் தாய்ப்பால் கொடுப்பது மிகவும் அவசியமாகும். ஆறு மாதங்களுக்குப் பின்னர் மேலதிக உணவுகளை கொடுக்கத் தொடங்க வேண்டும். இந்த நேரத்திலும், பிள்ளையின் இரண்டு வயது வரையிலும் தாய்ப்பால் கட்டாயமாக கொடுக்க வேண்டும். முதல் ஆறு மாதங்களுக்கு, குழந்தைக்கு தேவையான அளவில் எல்லா விதமான ஊட்டச்சத்துக்களையும் அடங்கிய ஒரு பூரண உணவாக இந்த தாய்ப்பால் காணப்படுவதால் தாய்ப் பாலூட்டுதல் என்பது குழந்தைக்கு மிகவும் அவசியமாகும். இதைவிட, தாய்ப்பாலில் நோய் எதிர்ப்புத் தன்மைக்கு தேவையான பதார்த்தங்களும் காணப்படுகின்றன. அதோடு, குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான பதார்த்தங்களும் காணப்படுகின்றன. மிக முக்கியமாக, குழந்தையின் மூளை வளர்ச்சி மற்றும் கண் பார்வைக்கு தேவையான முக்கியமான பதார்த்தமும் தாய்ப்பாலில் காணப்படுகிறது. எனவே, தாய்ப்பாலூட்டல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகிறது.

தாய்ப்பாலூட்டல் மூலம் தாய்க்கும் பல நன்மைகள் ஏற்படுகின்றன. உதாரணமாக, கர்ப்பகாலத்தில் ஏற்படும் குருதிப் பெருக்கை தடை செய்ய உதவுகிறது. நீண்டகாலத்தில் ஏற்படக்கூடிய மார்புப் புற்றுநோய் மற்றும் சூல் புற்றுநோய் போன்றவை ஏற்படாமல் தடுக்க உதவு



கிறது மற்றும் நாட்பட்ட நோய்களான நீரிழிவு, உயர் குருதி அமுக்கம் போன்ற நோய்கள் ஏற்படுவது குறைவடைய உதவுகிறது. தாய்ப்பாலூட்டுவதால், குழந்தையின் உள வளர்ச்சி மேம்படுவதுடன், தாய் சேய் பந்தம் அல்லது இணைப்பு அதிகரிக்கிறது.

தான் கொடுக்கும் தாய்ப்பால், குழந்தைக்கு போதுமா என்பது பல தாய்மார்களுக்கு காணப்படும் சந்தேகம் ஆகும். அருந்திய தாய்ப்பால் போதுமானதாக இருந்தால், குழந்தை நன்றாக நித்திரை கொள்ளும், ஒழுங்காக சலம், மலம் கழிக்கும். அதோடு குழந்தையின் வளர்ச்சி சரியான படிமுறைகளூடாக நடைபெறுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கும். தொழிலுக்கு செல்லும் தாய்மார்கள், தாய்ப்பாலை எடுத்து அறை வெப்பநிலையில் நான்கு மணித்தியாலங்களுக்கும், குளிர்சாதனப் பெட்டியில் 24 மணித்தியாலங்களுக்கும், மூன்று மாதங்களுக்கு Freezer இலும் வைக்கலாம். இவ்வாறு பாலை குழந்தைக்கு கொடுக்கும் போது போத்தல்களை பாவிப்பதை விட கோப்பை மற்றும் கரண்டியினூடாக கொடுப்பது சிறந்தது.

சில தாய்மார்கள் குழந்தைக்கு புட்டிப்பால் கொடுப்பதை விரும்புவார்கள். பல அயலவர்களின் அறிவுறுத்தல்கள், விளம்பரங்கள் போன்றவற்றால் புட்டிப்பால் குழந்தையின் வளர்ச்சிக்கு நல்லது என நம்புகிறார்கள். ஆனால், புட்டிப்பால் கொடுப்பதால் பல தீங்கான விளைவுகள் ஏற்படுகின்றன. தாய்ப்பாலில் காணப்படும் பல நன்மைகள் புட்டிப்பாலில் காணப்படுவதில்லை. குழந்தையின் வளர்ச்சிக்கு தேவையான ஊட்டச்சத்துகள், நோய் எதிர்ப்பு சக்திக்கு தேவையான பதார்த் தங்கள் என்பன தேவையான அளவில் புட்டிப் பாலில் காணப்படுவதில்லை. இதனால், புட்டிப்பாலை கொடுப்பதற்கான எந்த அவசியமும் இல்லை. அதோடு, புட்டிப்பாலை தயாரித்து, குழந்தைக்கு கொடுப்பது மிகவும் தூய்மையாக மேற்கொள்ளப்பட வேண்டும். வீடுகளில் இவ்வாறு தயாரிப்பதில் சிரமம் ஏற்படலாம். இந்த புட்டிப்பால் மிகவும் விலை கூடியதாகும். இதனால் பலர் ஒரு பேணியை கூடுதலான நாட்களுக்கு வைத்து பயன்படுத்தும் நிர்பந்தத்திற்கு உள்ளாகின்றனர். இதனால், பாலை செறிவு குறைந்த நிலையில் தயாரிக்கின்றனர். இவ்வாறு செய்யும்போது அப்பாலில் தேவையான அளவு போசணைப் பொருட்கள் காணப்படுவதில்லை. இதனால், குழந்தையின் நிறை குறையக் கூடிய சந்தர்ப்பம் காணப்படுகிறது. எனவே, இந்த புட்டிப்பாலை தவிர்த்து, தாய்ப்பாலை குழந்தைக்கு வழங்கி, ஆரோக்கியமான குழந்தையை வளர்த்தெடுங்கள்.

பேராசிரியர் கீதாஞ்சலி சத்தியதாஸ்
குழந்தை வைத்திய நிபுணர்
போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

## மனம் ஒருமித்து...

எமது மனநிலையை அமைதியாக ஒருமுகப்படுத்துவது தியானம் எனப்படும். இதுவும் எமது ஆரோக்கியத்தை, மனமகிழ்ச்சியை மேம்படுத்தும். தியானம் எனும்போது, அதை எங்கு, எப்படி, எப்போது செய்வது என்ற கேள்வி எழுகிறது. மனதை ஒருமுகப்படுத்தி அமைதியையும் ஆற்றலையும் பெறுவதை தியானம் என்று சொல்லலாம். தியானத்தை எப்போதும், எந்த சந்தர்ப்பத்திலும் நாம் செய்யலாம். உதாரணமாக, உணவு உண்ணும் போது, எமது கவனம் முழுவதையும் உண்ணுவதில் செலுத்துவதும் ஒரு வகை தியானம் ஆகும். உணவை அவதானித்து, ருசித்து, உணர்ந்து உண்பதும் இதற்குள் அடங்கும். இது எமது மனதை ஒருமுகப்படுத்தும், தேவையற்ற சிந்தனைகளை அகற்றும்.

தியானத்திற்கு எதிரான விடயம் என்னவென்றால், கவனத்தை சிதறவிடுதல் ஆகும். உதாரணமாக, உண்ணும் போது கடிகாரத்தைப் பார்த்தல், அவசரப்பட்டு உண்ணுதல், வேறு சிந்தனைகள், வீட்டில் இருக்கும் போது வேலைத்தளத்தை பற்றிய சிந்தனை, வேலைத்தளத்தில் இருக்கும் போது வீட்டைப் பற்றிய சிந்தனை என்பவற்றைக் குறிப்பிடலாம். இதனால், மனம் களைப்படைவதுடன் எமது வினைதிறன் குறைகிறது. அதோடு, மன அமைதி இல்லாமல் போகும். எனவே, செய்யும் செயற்பாட்டில் கவனம் செலுத்தி, மன அமைதியை பேணுவது அவசியமாகும். அத்துடன் நாம் செய்யும் தவறுகளை நாமே அடையாளப்படுத்தி உணர வேண்டும். இது அவ்வளவு எளிதான செயலல்ல. மற்றவர் செய்யும் தவறுகளை இலகுவாக சுட்டிக்காட்டத் தெரிந்த நமக்கு, நாம் செய்யும் தவறுகளை உணரமுடியாமல் போகிறது. எங்களை நாங்களே ஞாயப்படுத்துவதே அதிகமாக காணப்படுகின்றது. இவற்றை விடுத்து நாம் ஆரோக்கியமாக வாழ என்ன செய்யவேண்டும் என சிந்தித்து வாழ வேண்டும்.

எமது வாழ்க்கை முறையில் நாம் ஏற்படுத்தும் சிறு சிறு மாற்றங்கள் கூட, எமது ஆரோக்கியமான வாழ்விற்கு வழிவகுக்கும். எமது ஆரோக்கியமான வாழ்விற்கு வழிவகுக்கும் விடயங்கள் பற்றி எம் அனைவருக்கும் நன்றாக தெரியும். உதாரணமாக, ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கம், உடற்பயிற்சி செய்தல், மதுபானம் மற்றும் புகைத்தலை தவிர்த்தல், மனதை சந்தோஷமாக வைத்திருத்தல், சுத்தமாக இருத்தல், உடல் நிறையை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவை அனைத்தும் எமக்கு தெரிந்திருந்தும். நாளுக்கு நாள் நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், பாரிசவாதம், கொலஸ்திரோல் போன்ற நோய்கள் அதிகரிப்பதற்கு என்ன காரணம் என நாம் சிந்திக்க வேண்டும். தெரிந்த விடயங்களை நடைமுறைப்படுத்தாமையே இதற்கு பிரதானமான காரணமாகும். ஆரோக்கியம் சம்பந்தமான மாநாடுகளில் கூட ஆரோக்கியம் குறைவான உணவுகளே வழங்கப்படுகின்றன. சில தவறான புரிதல்கள், சோர்வு, அக்கறை இன்மை கூட ஆரோக்கியமற்ற வாழ்விற்கு இட்டுச் செல்லும். எல்லாம் தெரிந்திருந்தும், அவற்றை நடைமுறைப்படுத்தி, அதன் பலாபலன்களைப் பெறமுடியாத நிலையே காணப்படுகின்றது. இவ்வாறு இல்லாமல் பல ஆரோக்கியமான வாழ்க்கை நடைமுறைகளை அறிந்து, பரிந்து, எம் வாழ்வில் அவற்றை நடைமுறைப்படுத்தி பலன்களைப் பெற்று, மனம் ஒருமித்து ஆரோக்கியமாக வாழ்வோம்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்
போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

IDP Education நிறுவனம் நடத்தும் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து கல்விக் கண்காட்சிகள் மீண்டும் நடைபெறவுள்ளன. இம் மாதம் 21 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக நூலக அரங்கத்திலும் 23 ஆம் திகதி கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலிலும் நடைபெறவுள்ளன.

அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் உள்ள உலகத்தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்கள் இந்தக் கண்காட்சியில் உள்ளடக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

ஒவ்வொரு மாணவரும் வெற்றி பெறும் திறன் கொண்டவர்கள். உலகத் தரமான பல்கலைக்கழகங்களை அணுகும் வாய்ப்பை வழங்குவதன் மூலம் இலங்கை மாணவர்கள் தங்கள் கனவுகளை நனவாக்க முடியும். உலக சமூகத்தில் தமக்கென தனி இடத்தை உருவாக்க விரும்பும் இலங்கை மாணவர்களுக்கு இது ஒரு சிறந்த அடித்தளமாகும் என IDP Education இலங்கைக்கான பணிப்பாளர் தெரிவித்தார். (நி)




லங்கா மஹறால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (431)

UK-1350, Australia-2050, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2480, France-2180

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

தொடர்புகளுக்கு

077 839 3974, 076 889 1308


# அதிகாலையில் கோர விபத்து ஒருவர் பலி-32 பேர் காயம்



(மொனராகலை)

மொனராகலை வெலியாய பகுதியில் நேற்று அதிகாலையில் சம்பவித்த விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் 32 பேர் காயமடைந்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்து சபை பேருந்தும், சுற்றுலா சென்ற தனியார் பேருந்தும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் உயிரிழந்த இலங்கை போக்குவரத்து சபை பேருந்தின் ஓட்டுநர் தம்பகல்ல பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவராகும்.

பேருந்து விபத்தில் காயமடைந்தவர்கள் மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தம்பகல்லவில் இருந்து மொனராகலை நோக்கி சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தும் சுற்றுலா சென்ற தனியார் பேருந்தும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி)


## வேலைவாய்ப்பு

யாழில் இயங்கும் சுப்பர் மார்க்கட்டு பெண் பணியாளர்கள் தேவை.

- Adminstration
- Computer Billing + Cashier
- Sales Assistant

வயது எல்லை 18-40

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. (5058)

0774195209, 0774195218


## யா/வேலணை மத்திய கல்லூரியின் கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆங்கில பாட ஆசிரியை

**செல்வி. சங்கீதா கோபாலபிள்ளை**

அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர். கந்தையா கோபாலபிள்ளை**

அவர்களின் மரணச்செய்தி அறிந்து துயர் கொள்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றுள்ள குடும்ப உறவுகளுக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 22.09.1954 மறைவு 16.08.2025

**ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/வேலணை மத்திய கல்லூரி.**

(C-3661)

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் (JOBA) வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் (JOBA) 22.06.2025 அன்று நடாத்த திட்டமிடப்பட்டு ஒத்தி வைக்கப்பட்ட வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபை தெரிவும் எதிர்வரும் 07.09.2025 அன்று, ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு கல்லூரி தம்பர் மண்டபத்தில் பழைய மாணவர் சங்க தலைவர் திரு.குவிக்னேஸ் தலைமையில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்**
**பழைய மாணவர் சங்கம் (JOBA)**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**

(C-3659)

# இராசிபலன்

17.08.2025
ஆவணி 01, ஞாயிற்றுக்கிழமை
நவமி முன்னிரவு 8.58மணிவரை

கார்த்திகை காலை 6.56 மணிவரை
ரோகிணி பின்னிரவு 5.26 மணிவரை
சுப நேரம் 9.05-10.35 மணிவரை

இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
சந்திராஷ்டமம்: சுவாதி

வளவன்

**மேஷம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள்.

**ரிஷபம்** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**மிதுனம்** குடும்ப பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தேவையற்ற மனச்சஞ்சலங்களை தவிர்ப்பது நல்லது.

**கடகம்** விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**சிம்மம்** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சிறப்பான நாள், செல்வாக்கான நாள், போசன சுகமுண்டு.

**கன்னி** ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், எதிர்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், ரோக பயமுண்டு, எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**துலாம்** இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், அடுத்தவர் விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்** பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**தனுசு** கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், இனத்தவர் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், உடல் நலன் சீராகும், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும்.


**மகரம்** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**கும்பம்** மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**மீனம்** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு, உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

குறுகிய மனப்பான்மையை விட்டு விடுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ட்ரம்ப்-புடின் சந்திப்பு புஸ்வாணமானது

## எதிர்பார்க்கப்பட்ட முடிவுகள் எட்டப்படவில்லை



**(வோஷிங்டன்)**

**சர்வதேசத்தினால் எதிர்பார்க்கப்பட்ட ட்ரம்ப் - புடின் சந்திப்பு முடிவடைந்துள்ள நிலையில் அமெரிக்காவின் அலாஸ்காவில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் எந்த ஒப்பந்தமும் எட்டப்படவில்லை என தகவல் வெளியாகியுள்ளது.**

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையில் போர் நிறுத்தம் தொடர்பான இணக்கமும் ஏற்படவில்லை.

எனினும், விளாடிமிர் புடினுடனான, உக்ரைன் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

தானும் புடினும் ஒரு ஆக்கப்பூர்வமான சந்திப்பை நடத்தியதாகவும், அதில் சில முன்னேற்றங்களை அடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நேட்டோ கூட்டாளிகள் மற்றும் உக்ரைன் ஜனாதிபதி ஜலென்ஸ்கி உட்பட்டவர்கள், பேச்சுவார்த்தைகளுக்கு அழைக்கப்படுவார்கள் என்றும், இறுதி உடன்படிக்கைக்கு இணங்கவேண்டும் என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் மோதலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதில் உண்மையான ஆர்வம் இருப்பதாக புடின் தெரிவித்தார்.

மீண்டும் தமக்கிடையிலான ஒரு சந்திப்பு விரைவில் இடம்பெறும் என்றும் அது மொஸ்கோவில் இடம்பெறும் என்றும் புடின் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனியர்களும் ஐரோப்பியர்களும் சமாதான முன்னெடுப்புகளில் தலையிட மாட்டார்கள் என்று தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ட்ரம்ப் தனது நாட்டின் செழிப்பில் தெளிவாக அக்கறை கொண்டுள்ளார்.

ரஷ்யாவுக்கு அதன் சொந்த நலன்கள் இருப்பதைப் புரிந்து கொண்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கு இடையில் ஏற்பட்டுள்ள மோதலுக்கான முதன்மைக் காரணங்களை அகற்ற வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவும் ரஷ்யாவும் கடலால் பிரிக்கப்பட்டிருந்தாலும், நெருங்கிய அண்டை நாடுகள் என்று புடின் கூறியுள்ளார்.

1800 களின் நடுப்பகுதியில் அமெரிக்காவிற்கு விற்கப்படுவதற்கு முன்னர் சந்திப்பு இடம்பெற்ற அலாஸ்கா, ரஷ்யாவின் ஒரு பிரதேசமாக இருந்தது என்பதை புடின் நினைவுபடுத்தியுள்ளார்.

சந்திப்பின் பின்னர் இரண்டு ஜனாதிபதிகளும் செய்தியாளர்களின் கேள்விகளுக்கும் பதிலளிக்கவில்லை. (நி)

# 2 ஆம் உலகப் போர் வீரர்களுக்கு ஜப்பானில் அஞ்சலி



(டோக்கியோ)

இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்து, 80 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதை அடுத்து, நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த லட்சக்கணக்கான வீரர்களுக்கு ஜப்பானில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இரண்டாம் உலகப்போரில் ஜேர்மனி தலைமையில் இத்தாலி, ஜப்பான் உள்ளிட்ட அணியும், பிரிட்டன் தலைமையில் அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் உள்ளிட்ட நேச நாடுகள் அணியும் மோதின. 1939 ஆம் ஆண்டு தொடங்கிய போர், 1945 வரை நீடித்தது.


இதில் ஜப்பானை பணிய வைப்பதற்காக அமெரிக்கா ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களில் அணுகுண்டை வீசியது. இறுதியாக ஜப்பான் 1945 ஒகஸ்ட் 15 இல் சரணடைந்தது.

இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் சரணடைந்து 80 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், உயிர் தியாகம் செய்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. (நி)

# ஸ்பெயினில் பரவும் காட்டுத்தீ

## ஒன்றரை லட்சம் ஏக்கர் எரிந்து நாசம்

(மாட்ரிட்)



காலநிலை மாற்றத்தால் உலகின் சராசரி வெப்பநிலை பல மடங்கு உயர்ந்துள்ளது. இதனால் வறட்சியான காலநிலை காரணமாக அடிக்கடி காட்டுத் தீ ஏற்படுகிறது.

அதன்படி, ஸ்பெயினின் மேற்கு பிராந்தியமான கலீசியா, காஸ்டில் உள்ளிட்ட 14 இடங்களில் பயங்கர காட்டுத்தீ ஏற்பட்டது. கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக பரவும் இந்த காட்டுத் தீயில் சிக்கி 7 பேர் பலியாகி உள்ளனர். சுமார் 1 1/2 லட்சம் ஏக்கர் வனப்பகுதி எரிந்து நாசமாகி உள்ளன.

ஹெலிகாப்டர் மூலம் காட்டுத் தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். (நி)


REST IN PEACE



Dr.V.Sutharshan

Consultant Surgeon, Teaching hospital Jaffna

*Your Treatment, Service to the Community and Smile will always be remembered. May you find eternal peace and light*

Jaffna Medical Delegates Association


# 'ரஷ்யா இனி இருக்காது!'

## ஒட்டப்பட்ட போஸ்ரலால் பரபரப்பு

(வோஷிங்டன்)

உக்ரைன், ரஷ்யா இடையிலான போரானது மூன்று ஆண்டுகளைக் கடந்துள்ளது. இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வரும் மத்தியஸ்த பேச்சுவார்த்தையில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். இதன்படி, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் ட்ரம்ப் பேசினார்.

இதையடுத்து, அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தில் ஆங்கரேஜ் நகரில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி புடின் நேரில் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தச் சந்திப்பில் உக்ரைன் அமைதி ஒப்பந்தம் பற்றி இருவரும் ஆலோசனை நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

இதற்கிடையே, அமெரிக்காவில் அலாஸ்காவின் ஆங்கரேஜ் பகுதிக்கு. ட்ரம்பும், விளாடிமிர் புடினும் தனித்தனியாக விமானத்தில் வந்து சேர்ந்தனர். அங்கு புடினுக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. ரஷ்ய ஜனாதிபதி புடினை, ட்ரம்ப் கை குலுக்கி வரவேற்றார். இதன்பின், இரு நாட்டு தலைவர்களும் ஒன்றாக நின்று புகைப்படம் எடுத்து கொண்டனர்.

முன்னதாக, அலாஸ்காவின் ஆங்கரேஜ் பகுதியின் பல்வேறு இடங்களிலும் உக்ரைன் நாட்டுக்கு ஆதரவான போஸ்டர்கள் ஒட்டப்பட்டு இருந்தன. அதில், ரஷ்யா இனி இருக்காது என்றும், உக்ரைனுக்கு உறுதுணையாக இருப்போம் என்றும் காணப்பட்டது. இந்தப் போஸ்டரால் அலாஸ்காவில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் 19 ஆம் திருவிழாவான சூர்யோற்சவம் நேற்று நடைபெற்றது. காலை 6.45 மணியளவில் இடம்பெற்ற வசந்தமண்டப பூஜையை அடுத்து ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தில் எழுந்தருளிய சூரியபகவான் உள் வீதியுலா வந்ததைத் தொடர்ந்து வெளி வீதியுலாவும் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

(படம்- சிவசாந்தன்)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபமும் இணைந்து வழங்கும் "தெய்வீக இசையரங்கு" இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 6.45 மணி முதல் 8.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. அந்த வகையில் குழு இசை நிகழ்வில் பாட்டு- யாழ்ப்பாண பல்கலைக்கழக இசைத்துறை மாணவர்கள், வயலின்-திருமதி. வனஜா ஈஸ்வரசர்மா, மிருதங்கம்-ஞா.வசந்த, கெஞ்சிரா- செல்வன் புவனேஸ்வரன் வேணுகாந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு- கலாநிதி. ஆரூரன் அருணந்தி, வயலின்- கே.வேலதீபன், மிருதங்கம்-ப.திவ்ய ரூபசர்மா, கெஞ்சிரா- செல்வன் றமண சர்மா லயசர்மா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (3)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 150 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 200 | 150 | 200 |
| தக்காளி | 150 | 200 | 180 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 250 | 350 | 350 | 300 | 350 |
| கரட் | 400 | 500 | 600 | 600 | 500 |
| பூசணி | 100 | 140 | 100 | 80 | 100 |
| புடோல் | 100 | 100 | 100 | 100 | 150 |
| வாழைக்காய் | 150 | 120 | 150 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 100-300 | 300 | 220 | 250 |
| பெரிய வெங்காயம் | 150 | 140 | 140 | 130 | 150 |
| பாகற்காய் | 400 | 400 | 300 | 450 | 400 |
| வெண்டக்காய் | 150 | 100 | 100 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 300 | 320 | 200 | 250 | 400 |
| பயற்றங்காய் | 200 | 250 | 150 | 200 | 200 |
| லீக்ஸ் | 300 | 250 | 350 | 220 | 250 |
| பீற்றூட் | 100 | 120 | 180 | 120 | 150 |
| கறிமிளகாய் | 400 | 450 | 500 | 450 | 400 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 400 | 200 | 300 |
| போஞ்சி | 700 | 600 | 800 | 600 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 200 | -- | 160 |
| கீரை – 1 பிடி | 100 | 40-150 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 300 | 100 | 100 | 150 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 100-170 | 150-200 |
| இராசவள்ளி | 800 | 700 | 600 | 500 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 200 | 400 | 250 | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 50 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | -- | 200 |

## நல்லூர் உற்சவகால அருளுரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவகாலத்தை முன்னிட்டு சிவகுருஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வரும் "அருளுரை" இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணி முதல் 8.30 மணி வரை சிவகுரு ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்து கொண்டு "வேலை மறவேன்! "எனும் தலைப்பில் அருளுரை ஆற்றுவார். (8)

## நயினை- நல்லூர் திருத்தலப் பஜனைப் பாத யாத்திரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாவை முன்னிட்டு ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்ற நயினை நல்லூர் திருத்தலப் பஜனைப் பாத யாத்திரை நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

நயினை ஸ்ரீ நாக பூஷணி அம்பாள் ஆலயத்தில் காலை பூசை வழிபாடுகள் நடைபெற்று, வேல் பூசையுடன் வேல் எடுத்துக் கொண்டு திருத்தலப் பஜனைப் பாத யாத்திரை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும்.

குறிகட்டுவான், புங்குடுதீவு, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு, பண்ணை, யாழ்ப்பாணம், வில்லூன்றி, கந்தர்மடம் வழியாக 21 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழா அன்று அதிகாலை நல்லூரான் திருத்தலத்தைச் சென்றடைவர் அத்துடன் திருத்தேரின் பின் பஜனை வேல் அர்ச்சனையுடன் பாத யாத்திரை நிறைவடையவுள்ளது. (3)




## கா! நல்லைக் குமரேசனே!

அறிவுசெறி வாற்றல்மிகு ஔவையார் மேன்மையினை
அவனிக் குணர்த்தவெண்ணி
முறையாகப் பலகேள்வி கேட்டுமே யவர்பாட்டில்
முந்துதமிழ் சிந்தவருளி
நிறைவான இறைஞான முத்தார வித்தாரம்
நின்றுலகி லோங்கவைத்தாய்
அறநெறிகள் செழித்திங்கு ஆன்மீகம் பொங்கவரும்
அருநல்லைக் குமரேசனே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.

## ஈழத்து நல்லூரின் கைலாச வாகனத்தில் வருகிறான் காண்க

கைலாச வாகனத்தில் கந்தன் வருகிறான் காண்!
கைகூட்டி வணங்கிட நல்லூரான் வருகிறான் காண்
மையலுடன் தேவியரோடு வருகிறான் காண்
மலைக் கடவுள் பூலோக கைலாசத்தில் வருகிறான் காண்
இயல் இசை நாடகமெனும் முத்தமிழ் நாயகன்
ஈழத்து நல்லூரில் கைலாச வாகனத்தில் வருகின்றான் காண்
புயலாக போர் எழுந்த தேசத்தை வாழ்விக்க
புதுயுகத்தை காவல்செய்ய கைலாச வாகனத்தில்
வருகிறான் காண்.

மதுரகவி. காரை . எம்.பி.
அருளானந்தன்.

## அருள் புரிவாய் ஆறுமுகா!

உளம் கொண்டாய் தேவர்களின் துயரம் தீர்க்க!
களம் கண்டாய் சூரனைச் சங்காரம் செய்ய! – "சுட்ட"
பழம் தந்தாய் புலவர் ஔவையார்க்கு!- ஞானப்
பழம் ஆகி அப்பனுக்கே உபதேசம் செய்தாய்! – மாவில்
பழம் வேண்டி உலகதனைச்சுற்றி வந்தாய்!- சினம்
கொண்டு
பழனி ஆண்டியாம் கோலமதும் கொண்டாய்!- நாம்
நலம் நாடி உன்றனைத் தொழுகின்றோம்!- வேண்டும்
பலம் பெறவே அருள்புரிவாய் ஆறுமுகா!

நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்.

## ஆசிகள் வழங்கிடு ஆறுமுகா

அலராத பொழுதிலே அலராத பூக்களை
அழகனே உனக்காகப் பறித்து
அழகான மாலையாய் அழகாகக் கோர்த்து
அன்போடு சாத்துவர் நாளும்
உலகையே சுற்றி ஒரு மாங்கனிக்காய்
உன்னத தத்துவம் சொன்னாய்
விலகிட மாயை, விளைந்திட நன்மை
தரவேண்டும் எமக்கெலாம் ஆசி

கலாபூஷணம் நடராசா இராமநாதன்.

## நல்லூரான் நாமமதை நினைந்தெழு

கலைபொதிந்த தேரமர்ந்து வீதிவரும்
கந்தனையே காணத் திருநீறுடனே
அலைபோல் பக்தர்கள் கூட்டமது
ஆறுமுகன் தேரே வடம்பிடிப்பார்
உலைகண்ட பொன்போல ஒளிருமவன்
உயர்ந்த வேலைக்கு அருள்தருமே
நிலையான நல்லையூர் கந்தனவன்
நாமமதை தினம் கூறு நலம் பெறுவாய்.

"கலாபூசணம்" கே. ஆர். திருத்துவராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிண்ணம் வென்றது அவுஸ்திரேலியா
## இறுதி ஓவரில் வீழ்ந்தது தென்னாபிரிக்கா



மக்ஸ்வெல் விளாசல் கைகொடுக்க, 3ஆவது "ரி20இல் அவுஸ்திரேலிய அணி, 2 விக்கெட் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவை வென்றது. இதன்மூலம் தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள தென்னாபிரிக்க அணி, அங்கு மூன்று போட்டி கொண்ட "ரி20" தொடரில் பங்கேற்றது. முதல் இரு போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற, தொடர் 1-1 என சமனில் இருந்தது.

மூன்றாவது, கடைசி போட்டி கெய்ர்ன்ஸ் நகரில் நேற்று நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் மிட்சல் மார்ஷ் பந்துவீச்சைத் தேர்வு செய்தார்.

**பிரவிஸ் அரைச்சதம்**

தென்னாபிரிக்க அணிக்கு அணித் தலைவர் மார்க்ரம் (1), ரிக்கிள்டன் (13) ஜோடி சுமார் ஆரம்பம் கொடுத்தது. பிரிட்டோரியஸ் 24 ஓட்., எடுத்தார். சிக்சர் மழை பொழிந்த பிரவிஸ், 26 பந்தில் 53 ஓட். (6X6, 1X4) எடுத்து, எல்லிஸ் பந்தில் மக்ஸ்வெல் "பிடியில்" சிக்கினார். தென்னாபிரிக்க அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் ஆஸி சார்பில் எல்லிஸ் 3, ஹேசல்வுட், ஜாம்பா தலா 2 விக்கெட் சாய்த்தனர்.

**மக்ஸ்வெல் விளாசல்**

அவுஸ்திரேலிய அணிக்கு மார்ஷ், ஹெட் (19) ஜோடி ஆரம்பம் கொடுத்தது. இங்லிஷ் "டக்" அவுட்டாக, மார்ஷ் 37 பந்தில் 54 ஓட்டங்கள் எடுத்தார். கிரீன் (9), ரிம் டேவிட் (17) ஏமாற்ற, அவுஸ்திரேலியா 122/6 என திணறியது. பொறுப்பாக விளையாடிய மக்ஸ்வெல், பவுண்டரி மழை பொழிந்தார். 30 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். கடைசி 18 பந்துகளில் 27ஓட்டங்கள் தேவைப்பட்டன. ரபாடா ஓவரில் மக்ஸ்வெல் 15 ஓட்டங்கள் அடித்தார். 19வது ஓவரை கார்பின், "மெய்டனாக" வீசினார்.

கடைசி ஓவரில் 10 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் லுங்கிடி வீசிய முதல் 4 பந்தில் 6 ஓட். எடுக்கப்பட்டன. 5வது பந்தில் மக்ஸ்வெல், "ரிவர்ஸ் ஹிட்" முறையில் பவுண்டரி அடிக்க, அவுஸ்திரேலியா 19.5 ஓவரில் 173/8 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. மக்ஸ்வெல் (36 பந்து, 62 ரன், 2X6, 8X4), ஜாம்பா (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

## பாப் சிம்ப்சன் காலமானார்
### அவுஸ்திரேலிய கிரிக்கெட்டில் சோகம்

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் பாப் சிம்ப்சன் காலமானார். அவருக்கு வயது 89.


பாப் சிம்ப்சன் தனது 16வது வயதில் நியூ சவுத் வேல்ஸ் அணிக்காக முதல் தர போட்டியில் களமிறங்கினார். "பேட்டிங் ஆல்-ரவுண்டரான" இவர், 1957ல் ஜொகனஸ்பேர்க்கில் நடந்த தென்னாரிக்காவுக்கு எதிரான டெஸ்டில் அறிமுகமானார்.

62 டெஸ்ட் (4869 ஓட். 10 சதம், 27 அரைச்சதம், 71 விக்கெட்), 2 ஒருநாள் போட்டியில் (36 ஓட்., 2 விக்கெட்) விளையாடிய சிம்ப்சன், 257 முதல் தர போட்டியில் (21,029 ஓட்., 60 சதம், 100 அரைச்சதம், 349 விக்கெட்) பங்கேற்றுள்ளார். தவிர இவர், 39 டெஸ்டில் (12 வெற்றி, 15 "டிரா", 12 தோல்வி) அவுஸ்திரேலிய அணியை வழிநடத்தினார்.

கடந்த 1978ல் மே.தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் போட்டியுடன் சர்வதேச அரங்கில் இருந்து ஓய்வு பெற்றார். பின், 1986-1996ல் அவுஸ்திரேலிய அணிக்கு பயிற்சியாளராக இருந்தார். இவரது பயிற்சியின் கீழ், 1987ல் உலகக் கிண்ண வென்ற அவுஸ்திரேலியா, 4 முறை ஆஷஸ் தொடரை கைப்பற்றியது. சிறந்த களத்தடுப்பாளரான சிம்ப்சன், "சிலிப்" பகுதியில் 110 "பிடி" எடுத்துள்ளார். கடந்த 2013ல் ஐ.சி.சி., சார்பில் வெளியான சிறந்த வீரர்களுக்கான "ஹோல் ஒப் பேம்" பட்டியலில் சேர்க்கப்பட்டார்.

பிரதமர் இரங்கல்: இந்நிலையில் சிட்னியில் வயது மூப்பு காரணமாக சிம்ப்சன் காலமானார்.

அவுஸ்திரேலிய பிரதமர் அல்பனேஸ் கூறுகையில், "அவுஸ்திரேலிய கிரிக்கெட்டுக்கு சிம்ப்சன் ஆற்றிய பங்கு மகத்தானது. இவரது செயற்பாடு, ரசிகர்கள் மனதில் நீண்ட காலம் நிலைத்திருக்கும்" என்றார்.



## மாகாண மட்ட குத்துச் சண்டை போட்டியில்
## முல்லை.ஒட்டுசுட்டான் ம.வி 8 பதக்கங்கள்





வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான குத்துச் சண்டைப் போட்டியில் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் 2 தங்கப்பதக்கங்கள் மற்றும் 6 வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட குத்து சண்டைப் போட்டி கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரியால் நடைபெற்றது.

இக் குத்துச் சண்டைப் போட்டியில் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் பெண்கள் 16 வயதுப் பிரிவினருக்கான 50-52 கிலோகிராம் எடைப் பிரிவில் கே.துலசிகா வெள்ளிப் பதக்கத்தையும் 18 வயதுப் பிரிவினருக்கான 45-48 கிலோ கிராம் எடைப்பிரிவில் என்.அபினயா தங்கப்பதக்கத்தையும் எஸ்.மிக்சிகா வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றியதோடு 45-51 கிலோகிராம் எடைபிரிவில் எ.மதுரா வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றுக் கொண்டார்.

அத்துடன் ஆண்களுக்கான 18 வயதுப் பிரிவினருக்கான 52-56 கிலோ கிராம் எடை பிரிவில் எல். தனுஜன் வெள்ளிப் பதக்கத்தையும் 20 வயதுப் பிரிவினருக்கான 75-81 கிலோ கிராம் எடை பிரிவில் கே. ரம்சிகன் தங்கப்பதக்கத்தையும் எஸ். நெல்சன் வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றியதோடு 50-60 கிலோகிராம் எடைப்பிரிவில் என்.குஜின்சன் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது (3)



**வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட குத்துச்சண்டை போட்டியில் முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரி மாணவிகளான ரி.சாருஜா மற்றும் எஸ். குயின்சி ஆகியோர் தங்கம் வென்று சாதனை படைத்துள்ளனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான மக்கள் ஆட்சி மலர வேண்டுமானால் மக்கள் சிந்திக்க வேண்டும்.

– சோக்ரட்டீஸ்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

# பொலிஸ் சேவை தூய்மையாகுமா?

பொலிஸ்மா அதிபராகப் பிரியந்த வீரசூரிய பதவியேற்றுள்ளார். அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கத்தால் நியமனம் வழங்கப்பட்ட முதலாவது பொலிஸ்மா அதிபர் என்ற பெருமையை பிரியந்த வீரசூரிய பெற்றுக் கொண்டுள்ளார்.

பொதுவில் அண்மைக்காலமாகப் பொலிஸ்மா அதிபர் என்ற பதவி விமர்சனத்துக்குரியதாக ஆகிவிட்டது.

ஏலவே பொலிஸ்மா அதிபராக இருந்த தேசபந்து தென்னக்கோன் தொடர்பான விவகாரம் இந்த நாட்டின் முதன்மைக்குரிய பேசுபடுபொருளாக இருந்தது.

எனினும் பொலிஸ்மா அதிபராக இருந்த தேசபந்து தென்னக்கோனின் பதவி வெறுதாக்கப்பட்டதைத் தொடர்ந்து, உடனடியாகப் புதிய பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிலும் ஏலவே பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்தவரை பொலிஸ்மா அதிபராக நியமித்தபோது, அங்கு விமர்சனங்களுக்கு சந்தர்ப்பம் இல்லாமல் போயிற்று.

இஃது ஒருபுறமிருக்க, தற்போது பொலிஸாரை வெளிப்படையாக எதிர்க்கின்ற கலாசாரம் எழுகை பெறுகின்ற அளவில் இலங்கை பொலிஸ் சேவை தாழ்ந்து போனமை வேதனைக்குரியது.

கடந்த காலங்களில் பொலிஸாரை எதிர்த்துக் கதைக்கின்ற நிலைமை இருந்திருக்கவில்லை.

ஆனால் இப்போது பொலிஸாரை எதிர்த்துக் கதைப்பதற்கும் அவர்களிடம் கேள்வி கேட்பதற்கும் பொதுமக்கள் அதிலும் குறிப்பாக இளைஞர்கள் தயாராகிவிட்டனர்.

இவ்வாறான நிலைமை நாட்டுக்கு அவ்வளவு ஆரோக்கியமானதல்ல.

எனினும் இத்தகையதொரு நிலைமை ஏற்படுவதற்குக் காரணம், பொலிஸ் சேவையில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களில் ஒரு சாரார் என்பதை இங்கு சுஹித்தானாக வேண்டும்.

ஆம், பொலிஸாரில் ஒரு தரப்பினர் மிக மோசமான ஊழல்வாதிகளாகவும் பணத்துக்கும் சாராயத்துக்கும் விலைபோகக் கூடியவர்களாகவும் உள்ளனர்.

அதிலும் குறிப்பாகப் போக்குவரத்துப் பொலிஸாரில் கணிசமானவர்கள் இலஞ்சம் வேண்டுவதனை முழு நோக்கமாகக் கொண்டு வாகனங்களைச் சோதனையிடுகின்றனர்.

தவிர, தாம் மது அருந்திவிட்டு சாரதிகள் மது அருந்தியிருக்கிறார்களா என்று சோதிக்கின்ற பொலிஸாரையும் களத்தில் காணமுடிகின்றது.

ஆக, பொலிஸ் சேவை இத்துணை தூரம் தாழ்ந்தபோது அவர்களை எதிர்ப்பதற்கு பொதுமக்கள் தயங்கமாட்டார்கள் என்பது தான் உண்மை.

ஆகவே புதிதாகப் பதவியேற்றுள்ள பொலிஸ்மா அதிபர்; முதலில் பொலிஸ் திணைக்களத்தில் தாண்டவமாடும் இலஞ்சத்தை ஒழித்துக் கட்டுவதுடன் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மது அருந்துவதை முற்றாகத் தடுக்க வேண்டும்.

அப்போதுதான் பொலிஸாரால் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறவும் முடியும்.

## மன்னார் – இலுப்பக்கடவையில் டிப்பர் – பேருந்து விபத்து

(மன்னார்)

இலுப்பக்கடவைப் பகுதியில் பேருந்து ஒன்றும் டிப்பர் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மன்னார் மடு தேவாலயத்தின் ஆவணித் திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலையில் அதில் கலந்து கொண்டவர்களுடன் ஆலயத்திலிருந்து திரும்பிய பேருந்தும் டிப்பர் ரக வாகனமும் இலுப்பைக்கடவைப் பாலத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் பேருந்தின் சாரதி பலத்த காயங்களுடன் பள்ளமடு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## போதைவஸ்துக்களுடன் இரு சந்தேக நபர்கள் கைது

ஐஸ், ஹெரோயின் மற்றும் போதை மாத்திரைகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் களுத்துறை மற்றும் கல்பாத பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

சந்தேக நபர்களிடமிருந்து 6 ஆயிரத்து 800 மில்லி கிராம் ஐஸ், 60 மில்லி கிராம் ஹெரோயின் மற்றும் 600 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

### தனியார் வங்கியொன்றின்

## கோடிக்கணக்கான பணத்தை அபேஸ் செய்த சாரதி கைது

பம்பலப்பிட்டியில் இயங்கி வரும் தனியார் வங்கியொன்றின் கோடிக்கணக்கான பணம் வங்கிக்கு சொந்தமான வானிலிருந்து மாயமான சம்பவம் தொடர்பில் வானின் சாரதி நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 13ம் திகதி கொழும்பில் உள்ள குறித்த வங்கிக்குச் சொந்தமான ஏ.டி.எம்களில் உள்ள பணத்தைச் சேகரிப்பதற்காக வங்கியின் வாகனத்தில் நால்வர் கொண்ட குழுவினர் சென்றுள்ளனர்.

இதன்போது 15 ஏ.டி.எம்களில் இருந்து பணம் சேகரிக்கப்பட்டுள்ளது. எனினும் வங்கியில் ஒப்படைக்கையில் 14 பைகளே இருந்துள்ளன.

இந்நிலையில் மாயமான பணப்பையில் ஒரு கோடியே 3 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் பணம் உள்ளதாக வங்கி அதிகாரிகளால் மதிப்பிடப்பட்ட நிலையில் இது குறித்து முகாமையாளரால் பம்பலப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக துரித விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் பணம் எடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வானின் சாரதியைக் கைது செய்ததுடன் மேலதிக துரித விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரிப்பு

2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் 14 இலட்சத்து 67 ஆயிரத்து 694 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்பிரகாரம் இவ்வாண்டின் ஆகஸ்ட் மாதத்தின் முதல் 13 நாட்களில் 99,406 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அவர்களில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 19,572 ஆகும்.

மேலும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 10, 970 சுற்றுலாப் பயணிகளும் இத்தாலியிலிருந்து 7,641 சுற்றுலாப் பயணிகளும் பிரான்ஸிலிருந்து 6,870 சுற்றுலாப் பயணிகளும் சீனாவிலிருந்து 6,762 சுற்றுலாப் பயணிகளும் ஜேர்மனியிலிருந்து 5,877 சுற்றுலாப் பயணிகளும் வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ம-7)

## உந்துருளி விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

நீர்கொழும்பு - குடாப்பாடு பிரதேசத்தில் இடம்பெற்ற உந்துருளி விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (15) மாலை இடம்பெற்ற இவ் விபத்துத் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குறித்த இளைஞன் உந்துருளியில் பயணித்த வேளை கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீதியை விட்டு விலகி அருகிலிருந்த வீடொன்றின் மதில் மீது மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதில் படுகாயமடைந்த இளைஞன் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் நீர்கொழும்பு - குடாப்பாடு பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடையவர் என இனங்காணப்பட்டுள்ளது.

இந்த விபத்துத் தொடர்பில் நீர்கொழும்புப் பொலிஸார்மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## விசேட சுற்றிவளைப்பு 4,875 பேர் கைது

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 4 ஆயிரத்து 875 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவ வீரர்கள், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 24 பேரும் சந்தேகத்தின் பேரில் 689 பேரும் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 242 பேரும் திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 158 பேரும் மதுபோதையில் வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 100 சாரதிகளும் கவனக்குறைவாக வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 27 சாரதிகளும் ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3 ஆயிரத்து 635 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக முயற்சியாளர் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் விழிப்புணர்வு பேரணி!



(வவுனியா)

உலக முயற்சியாளர் தினத்தை முன்னிட்டு வவுனியா பல்கலைக்கழகத்தின் முயற்சியான்மை கற்கைகள் பிரிவின் மாணவர்கள் இணைந்து நேற்று விழிப்புணர்வு பேரணி ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தனர்.

இலங்கையின் முயற்சியாளர்களின் பொருளாதார மேம்பாடு இலங்கைக்கு முக்கியமான ஒரு விடயமாக கருத்தில் கொண்டு உலக முயற்சியாளர் தினத்தை அனுஷ்டிக்கும் முகமாகவும் எதிர்வரும் 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் வவுனியா பல்கலைக்கழகத்தில் புத்தாக்கம் வர்த்தக கண்காட்சி மற்றும் வர்த்தக செயற்பாடுகள் தொடர்பான கருத்தரங்குகளும் இடம்பெறுகின்ற நிலையிலேயே இந்த விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா பல்கலைக் கழகத்தின் பூங்கா வீதியில் உள்ள வெளிவாரிகள் கற்கைகள் பிரிவில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் வவுனியா நகர் வழியாக சென்று மீண்டும் வெளிவாரி கற்கைகள் பீடத்தை வந்தடைந்திருந்தது.

இதன்போது பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் அ.அற்புதராஜா, வியாபாரக் கற்கைகள் பீட விரிவுரையாளர்கள் மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-250)

# யோகா பயிற்சிகள் ஆரம்பம்


(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப்பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத்திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா சளி தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுபட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தீர, தைராய்டு பிரச்சினைகள் தீர, எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் மற்றும் சூரிய நமஸ்காரம் வழங்கப்படும்.

பயிற்சிகளில் 14 வயதிற்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் இருபாலாரும் பங்குபெறலாம். பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் கே.ஆர்.முனிரத்தினம் அவர்கள் வங்குவார்கள். மேலதிக தொடர்புகளுக்கு 021 222 2772 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (3)

# நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்தில் தீ!



(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயத்திற்கு சுற்றுலா வந்தவர்களின் பேருந்து திடீரென தீப்பற்றி எரிந்தமையால் சிறிது நேரம் அவ்விடத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

தென்னிலங்கையில் இருந்து பேருந்தில் யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலா வந்தவர்கள், நல்லூர் முத்திரை சந்தி பகுதியில், பேருந்தினை நிறுத்தி விட்டு , நல்லூர் ஆலயத்திற்கு சென்றுள்ளனர்.

சாரதி பேருந்தில் இருந்த நிலையில் திடீரென பேருந்து தீ பற்றியுள்ளது. விரைந்து செயற்பட்ட சாரதி தீயினை அணைக்க முற்பட்ட வேளை அது பயனளிக்காத நிலையில் அவ்விடத்தில் நின்றவர்கள் யாழ் . மாநகர சபையின் தீயணைப்பு படையினருக்கு தகவல் வழங்கியதை அடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு படையினர் பேருந்தில் ஏற்பட்ட தீயினை அணைத்தனர்.

தீயணைப்பு படையினரின் விரைவான செயற்பாட்டினால், பேருந்தினுள் தீ பெருமளவுக்கு பரவாமல் அணைக்கப்பட்டது. (8-33)

# கனியமணல் அகழ்வுக்கு எதிராக கறுப்புப் பட்டி அணிந்து போராட்டம்



(மன்னார்)

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று சனிக்கிழமை 14 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மக்கள் மற்றும் இளையோர் ஒன்றிணைந்து முன்னெடுத்து வருகின்ற போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் வங்காலை மற்றும் தலைமன்னார் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் குறித்த போராட்டத்தில் இணைந்து கொண்டு தமது ஆதரவை தெரிவித்தனர்

குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தலையில் கருப்பு பட்டி அணிந்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-285)

# கிளி.மாவட்ட வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு இரத்த அழுத்தத்தை பார்வையிடும் கருவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்குதல், சத்திர சிகிச்சைகள் வறுமைக் கோட்டில் வாழும் மக்களுக்கான மருத்துவ வாழ்வாதாரம் மற்றும் கிராமங்கள் தோறும் நடமாடும் மருத்துவ சேவைகள் போன்றவற்றை செந்தில் குமரன் அறக்கட்டளை நிறுவனத்தினர் வழங்கி வருகின்றனர்.

அந்தவகையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு செந்தில் குமரன் அறக்கட்டளை நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் வானனினால் 18 இலட்சம் ரூபா பெறுமதியான இரத்த அழுத்தத்தை பார்வையிடும் கருவி, இதயத் துடிப்பை கண்டறியும் கருவி மற்றும் மடிக்கணினி ஆகியன வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் பிரபாத்திடம் வழங்கி வைக்கப்பட்டன.

இவ் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையின் பிரதிப்பணிப்பாளர் தயாழினி, இதய வைத்திய நிபுணர் த.ஜெயகாந், வைத்திய அதிகாரிகள், மற்றும் தாதியர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டார்கள். ([illegible])

# பண்பாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையுடன் யாழ்ப்பாண பிரதேச செயலகமும் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் பண்பாட்டு விழா எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்ப்பாணம் கலாசாரப் பேரவையின் தலைவர் சா.சுதர்சன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன், சிறப்பு விருந்தினராக வட மாகாண பண்பாட்டலுவல்கள் அலகு பிரதிப்பணிப்பாளர் திருமதி.லாகினி நிருபராஷ், கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குனர் யோ.ராஜ் குமார ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். ([illegible])

# போராட்டத்தில் குதிக்கவுள்ள தபால் ஊழியர்கள்

(கொழும்பு)

தபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கம் மற்றும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியினர் இணைந்து இன்று முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

அதன்படி, இன்று மாலை 4 மணி முதல் குறித்த ஊழியர்கள் தமது சேவையில் இருந்து விலகி பணிப் புறக் கணிப் பை முன்னெடுக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தபால் ஊழியர்களின் மேலதிக கொடுப்பனவு, நிர்வாக அலுவலகம் மற்றும் கணக்காய்வு அலுவலகங்களில் ஊழியர்களின் பணியை ஆரம்பிக்கும் நேரம் மற்றும் வெளியேறும் நேரம் என்பவற்றை கைவிரல் அடையாள இயந்திரங்களில் பதிய வேண்டும் என்ற அறிவுறுத்தல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தல் உள்ளிட்ட 19 கோரிக்கைகளை முன்வைத்து தபால் ஊழியர்கள் இவ்வாறு பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளனர்.

அதன்படி, இன்று மாலை 4 மணிக்கு கொழும்பு மத்திய தபால் பரிமாற்றத்தின் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பை ஆரம்பிக்கவுள்ளனர்.

பின்னர் நள்ளிரவு 12 மணி முதல் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து தபால் நிலையங்களில் உள்ள ஊழியர்கள் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளதாகவும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி அறிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 பவுண் தங்க...

தரிப்பைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான ரோபோட் ராஜ்குமார் அன்சுதாஜினி (வயது-43) என்பவரே உயிரிழந்தவராவார்.

25 பவுண் தங்க நகைகளை நண்பிக்கு கொடுத்ததாகவும் அவர் நகையை கொடுக்காது ஏமாற்றி வந்ததாகவும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (15) மீண்டும் நகையைக் கேட்டபோது ஏமாற்றிவிட்டதை அறிந்து நேற்று சனிக்கிழமை (16) அதிகாலை தூக்கில் தொங்கி உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## மின்சாரம் தாக்கி...

இதில் சங்கரத்தை - துணவி பகுதியைச் சேர்ந்த அருள்ஜீவன் பிரசாத் (வயது 17) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

குறித்த சிறுவன் ஆறுகால்மடம் பகுதியில் உள்ள வாகன சேவிஸ் நிலையத்தில் பணிபுரிந்து வருகின்றார்.

இதன்போது நேற்று அங்கு பணிபுரியும்போது அவர் மீது மின்சாரம் தாக்கியது.

இவ்வாறு மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார். இது குறித்த விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## அரச ஊழியர்...

அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடியது.

ஆனால் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்று என்னால் வாக்குறுதி வழங்க முடியாது என்றார். (ம-7)

## குற்றங்களைக்...

ஊடகம் ஒன்றுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"நாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தலைமறைவாகி இருந்த 11 குற்றவாளிகள் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

குற்றச் செயல்களைத் தடுக்கும், குற்றக் குழுக்களை ஒடுக்கும் வேலைத் திட்டத்தைத் தற்போதுள்ள சாதாரண சட்டத்தின் பிரகாரம் முழுமையாக முன்னெடுக்க முடியாது.

இதுபற்றி ஜனாதிபதி, நீதி அமைச்சர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். இதற்கமைய தேவையான புதிய சட்ட ஏற்பாடுகள் வகுக்கப்பட்டு வருகின்றன.

இந்த விடயத்தில் சர்வதேசத்தின் ஒத்துழைப்பு எமக்குக் கிடைக்கப் பெறுகின்றது. சர்வதேசத்தின் நன்மதிப்பை இலங்கை பொலிஸ் பெற்றுள்ளது.

அதேவேளை, நாட்டில் இடம்பெறும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களைத் தடுப்பதற்குரிய வேலைத் திட்டம் செயற்படுகின்றது.

சட்டத்தில் சில குறைபாடுகள் உள்ளன. பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் நாம் தற்போது கைவைப்பதில்லை.

இவ்வாறு சட்ட ரீதியாக உள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும். போதைப்பொருள் மாபியாக்களின் பிடிக்குள் சிக்கிய பொலிஸ் அதிகாரிகள் சேவையில் இருந்து நீக்கப்படுவார்கள். உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

# நீரில் மூழ்கி சிறுவன் மரணம்

புத்தளம் - மதுரங்குளி பகுதியில் ஏரியில் நீராடிக்கொண்டிருந்த சிறுவனொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவன் நீரில் மூழ்குவதனை அவதானித்த பிரதேசவாசிகள் இணைந்து சிறுவனை மீட்டு, புத்தளம் வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் சிறுவன் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த சிறுவன் புத்தளம் - கரிகட்டிய பகுதியைச் சேர்ந்த 12 வயதுடையவர் எனவும் தனது அத்தையுடன் ஏரியில் நீராடிக் கொண்டிருந்த போது நீரில் மூழ்கி உயிரிழந் துள்ளதாகவும் மதுரங்குளி பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதுடன் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-7)

## இருவருக்கு...

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ள யாழ்ப்பாணம் பொலிஸார் ஐவரைக் கைது செய்துள்ளனர்.

நல்லூர் க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இடம்பெற்று வருகின்றமையால் அங்கு அதிகளவான பொலிஸார் குவிக்கப்பட்டிருக்கும் நிலையிலும் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,104)

## மகிந்...

விக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், "கோட்டாபய ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட சந்தர்ப்பத்தில் தனக்கு ஒன்றும் செய்ய முடியாது. தனது கைகள் கட்டுப்பட்டுள்ளது என்றார்.

அதன் பின்னர் 20ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றதிகாரம் மீள வழங்கப்பட்டது.

அதை நிறைவேற்றவும் ஒரு வருடம் கடந்தது. குறிப்பாக மகிந்த ராஜபக்ஷ அன்று பிரதமர் பதவி வகித்தார். அரசியலில் ஞானத்தில் கைதேர்ந்தவராக இருந்தார்.

ஆனால் அவரின் சில நிலைப்பாடுகள் கூட நிறைவேறவில்லை. அன்றைய நிலையில் கோட்டாபயவுக்கு நிறையப் பேர் உபதேசம் வழங்கி இருந்தனர். ஆனால் சரியான அறிவுரைகளை அவர் கேட்கவில்லை.

ஒரு கட்டத்தில் கோட்டாபய வேலைகளைச் செய்ய ஆரம்பித்த போது, அதற்கு எதிராகப் போராட்டங்களும் எதிர்ப்புகளும் கிளம்பின. அவர் அரசை மேலாண்மை செய்யத் தவறிவிட்டார். மேலாண்மை செய்வதற்கான தளத்தை யாரும் அமைத்துக் கொடுக்கவில்லை" என்றார். (ம-7)

**மஹஜன சம்பத** — திகதி 2025.08.16, சீட்டிழுப்பு இலக்கம் 5923 — R 8 7 6 4 0 6
**அத சம்பத** — R 6 4 0 6 — சீட்டிழுப்பு இலக்கம் 0498

**சுப தவசக** — திகதி 2025.08.16, சீட்டிழுப்பு இலக்கம் 0839 — சிம்மம் 11 22 42 43

**தன நிதானய** — திகதி 2025.08.16, சீட்டிழுப்பு இலக்கம் 1953 — H 04 55 56 81 H — Double Chance 55454

**மெகா பவர்** — திகதி 16/08/2025, சீட்டிழுப்பு இலக்கம் 2271 — M 22 06 15 16 80

**ஜய ஜய** — திகதி 2025.08.16, சீட்டிழுப்பு இலக்கம் 0191 — Q 7 2 4 1

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 4165, சீட்டிழுப்பு திகதி 16.08.2025 — O 19 28 33 48 — O

**HANDAHANA** — சீட்டிழுப்பு திகதி 2025.08.16, சீட்டிழுப்பு இலக்கம் 1232 — விருச்சிகம் 02 27 35 62 விருச்சிகம் — தன யோக இலக்கம் 77272

**சுபிரி வாசனா** — 16.08.2025, வெற்றி வாரம் 0631 — E 1 4 7 1 1 4 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,128,351.20

**SUPER BALL** — சீட்டிழுப்பு வாரம் 2897, சீட்டிழுப்பு திகதி 2025.08.16, தினம் சனிக்கிழமை — 15 31 69 74 E — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,400,738.40

**சனிதா** — திகதி 16.08.2025, வெற்றி வாரம் 5058 — 06 26 48 76 Z — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,518,429.60

**சசிரி** — வெற்றி வாரம் 749, சீட்டிழுப்பு திகதி 16.08.2025, சனிக்கிழமை — 05 26 38 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

**ராசி** — சீட்டிழுப்பு வாரம் 4609, சீட்டிழுப்பு திகதி 16.08.2025, தினம் சனிக்கிழமை — 01 07 40 54 தனுசு — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,481,854.00

**லக்பிம** — 2073, 16.08.2025 சனிக்கிழமை — R 23 05 28 41 53 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.588,228,521.60

**அத கோட்டிபதி** — சனிக்கிழமை, வெற்றி வாரம் 2723, சீட்டிழுப்பு திகதி 2025.08.16 — 18 20 55 69 Y — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.82,655,372.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராய் செல்லத்துரை வீதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வீடு. தோட்டம் செய்யலாம். விரும்பினால் 2 பேர் பிரித்து எடுக்கலாம். (5047)

**074 010 6595**

## வீடு வாடகைக்குண்டு

ஆரியகுளம் சந்திக்கு அருகில் அனைத்து விதமான வியாபார தேவைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் நடத்துவதற்கு பொருத்தமான வீடு வாடகைக்கு (5055)

**077 974 1382**

## வேலைக்கு ஆட்கள் தேவை

வாகன சாரதி

SVDS Distributors (Pvt) Ltd

தொடர்புகளுக்கு (1443)

**077 245 4224**


## கிட்னி தேவை

AB+ குருதி வகை உடையவருக்கு அவசரமாகக் கிட்னி தேவை.

தொடர்புகளுக்கு (5059)

**0776161376**

## காணவில்லை



துன்னாலையைச் சேர்ந்த சிவபாதம் யோகநாதன் (வயது - 58) என்பவரை கடந்த 30.06.2025 அன்றிலிருந்து காணவில்லை. மனநலம் பாதிக்கப்பட்ட இவர் காணாமல் போகும் போது நீல நிறக் காற்சட்டையும் மண்நிறச் சட்டையும் அணிந்திருந்தார். இவரைக் கண்டவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும் (5046)

தொடர்புகளுக்கு

**077 625 9881**

## ICT Classes (Individual & Batch)

Medium: Tamil & English

Grade: 6,7,8,9 &10,11

Contact : V.V.Moorthy(ICT&IT) Thirunelvely, Jaffna. (C-3660)

**077 746 9282**

## வீடு வாடகைக்குண்டு

யாழ்.பரமேஸ்வரா சந்தியில் புதிய வீட்டில் 2ம் மாடி 4 அறைகள் +AC சகல நவீன வசதிகளுடன் வாடகைக்குண்டு. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. தரகர் தொடர்பு கொள்ளத் தேவையில்லை. (5055)

**077 974 1382**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3710/- |
| 11-16 Kg | 2660/- |
| 21-27 Kg | 2480/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3662)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241 / 076 822 6237

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவனில் ஆயாக்கடவை பிள்ளையார் கோயிலிலிருந்து 500 மீற்றர் தூரத்தில், நல்ல செம்மண் வளமுள்ள காணி 2 பரப்பாகவும், 4 பரப்பாகவும் விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கும், தோட்டம் செய்வதற்கும் ஏற்றது. (5031)

**0771298159**

## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| Clerk | :0755489898 |
| நிகழ்ச்சி தயாரிப்பாளர் | :0773322527 |
| Bill Clerk | :0777738715 |
| Heavy Vehicle Driver | :0771202733 |
| Accountant | :0776696385 |
| Office Incharge | :0741166057 |
| சமையலாளர் | :0770085277 |
| Administration | :0778738834 |
| Customer Care | :0755489898 |
| Social media Presenter | :0778738834 |
| ARSM | :0741166057 |
| Decoration Helper | :0777750318 |
| Waiter/Kitchen Helper | :0766587149 |
| பராமரிப்பாளர் | :0770085277 |
| Assistant Sales Manager (Basic 60,000) | |

(5057)

வேலைவாய்ப்பு வட்சப் குருப்பில் இணைய மற்றும் மேலதிக வேலைவாய்ப்புகளுக்கு : dewmasweb.com

வேலையாட்கள் தேவையா : 077 773 3368

DEWMAS, 51, Amman Road, Nallur

## அண்ணா பொதிகள் சேவை



யாழ்ப்பாணம்

UK - 1,350/- 16+
France - 2,050/- 16+
Germany - 1,950/- 16+
Canada - 2,600/- 16+

தேவை வேலையாட்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் யாழ்.நகரத்துக்கு அண்மையில் இருப்போர் விரும்பத்தக்கது. (5063)

**075 330 5500 / 070 330 5500**

## வேலையாட்கள் தேவை

வவுனியாவில் இயங்கி வரும் பொதிகள் சேவை நிறுவனம் ஒன்றிற்கு அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. (1440)

**076 889 1308**
**077 839 3974**

## கல்லீரல் தானதாரர்கள் தேவை உயிர் காக்கும் உதவி

எங்கள் குடும்பத்தில் ஒருவருக்கு அவசரமாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை (Liver Transplant) தேவை. உங்கள் தன்னார்வ தானம் அவருக்கு புதிய வாழ்க்கையைத் தரலாம்.

தகுதிகள்

- வயது: 20 - 50 வயது.
- எடை: 50 - 70 கிலோ.
- இரத்த வகை: O (ஓ) மட்டுமே.

மதுபானம் உபயோகிப்பவர்கள் அல்லாதவர்கள் (no alcohol).

முக்கியக் குறிப்பு: தானதாரராகத் தேர்ந்தெடுக்கப்படுவது முழுமையான மருத்துவ, மனோதத்துவ மற்றும் ஆய்வு பரிசோதனைகளுக்குப்பிறகு மட்டுமே. தானதாரர்கள் (Donors) 3முதல் 6 வாரங்களில் முழுமையாக குணமடைவார்கள். (சம்பந்தப்பட்டவர்கள் மட்டும்தொடர்பு கொள்ளவும்) (1448)

தொலைபேசி: **0703011765**

உதவி தர விரும்புமா? தயவு செய்து உடனே தொடர்பு கொள்ளுங்கள் உங்கள் முடிவு ஒருவரின் வாழ்க்கையை மாற்றியமைக்கும்.

## வீடு தேவை

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பிறவுண் வீதி, நல்லூர், கொக்குவில், கல்வியங்காடு வீடு விற்க உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும் (1446)

whatsapp

**077 252 3155**

## ஓட்டோ விற்பனைக்கு

YN xxxx எனும் தொடரிலக்கத்தை உடைய நீல நிற ஓட்டோ செல்வா பலஸ் பூநாரிமடம் அருகே உடன் விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை. விலை பேசித் தீர்மானிக்கலாம் (5062)

**077 435 0680**
**076 656 6231**

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல வைத்தியசாலையில் பின்வரும் பதவிகளுக்கான தகுந்த ஊழியர்களை எதிர்பார்க்கின்றது.

- Office boy (அலுவலக உதவியாளர்)
- Operation Theatre boy (ஆப்ரேஷன் தியேட்டர் உதவியாளர்)
- Security Guard (பாதுகாப்புக் காவலர்)
- Cleaning Staff (Female) (சுத்திகரிப்புத் தொழிலாளர்)
- Store Keeper (களஞ்சிய காப்பாளர்கள் - பெண்கள்)
- Account Assistant (கணக்கு உதவியாளர் - பெண்கள் A/L)

(5066)


குறிப்பு: யாழ்.நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.
- G.S Character Certificate
- உங்கள் சுய விபரக் கோவையினைக் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

**074 202 7318**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 209/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 168/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 240/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg சம்பா அரிசி | - 230/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 188/= | Max 3Kg |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 239/= | |
| 10Kg விஜிதா நாடு | - 2650/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 188/= | |
| 1Kg கீரிச்சம்பா | - 255/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 1100/= | |
| 1Kg கடலை | - 384/= | |
| 1Kg சோயா | - 350/= | |
| அங்கர் யோக்கட் | - 45/= | 70/= |




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (1454)

Happy Supermarket 0777 8080 30

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org